# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 39-ம் இலக்கம்


# மிஷன்ஞாயிறும் வேதபோதக நாடுகளும்

## பாப்பரசரின் விசுவாசப் பரப்புதற்சபை ஆற்றிவரும் மாபெரும் தொண்டுகள்

அர்ச். பேதுருவானவர் சிறைச்சாலையில் இருந்தபோது முழுத் திருச்சபையும் அவருக்காக மன்ருடிச் சர்வேசுரனிடம் பரிந்து பேசியது. அவரும் ஓர்சம்மனசானவரால் விடுதலைசெய்யப்பட்டார். திருச்சபைச் சரித்திரத்தின் பல்வேறுகாலங்களிலும் அர்ச். பேதுருவானவரின் பதிலாளிகளாய்வந்த பாப்புமார் இம்சிக்கப்பட்டும், எதிர்க்கப்பட்டும் வந்திருக்கிறர்கள். அப்படியான ஒரு காலத்தில்தான் இன்று நாமும் உயிர்வாழ்கின்ரேம். சீனுவிலே கம்யூனிஸ்த வேதகலாபனை ஆரம்பமானபோது அத்தேச மேற்றிராணிமாருக்கும், குருமாருக்கும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாருக்கும் சொல்லப்பட்டது என்ன? பாப்பானவரை நீங்கள் அங்கீகரியாது அறவேமறுதலித்துவிடின், உங்கள் கோவில்கள், மனைகள், கலாசாலைகள்,வைத்தியசாலைகள், அநாதர்சாலைகள், குஷ்டரோகர் தலங்களை இழந்துபோகாது நிரந்தரமாகக் கொண்டிருப்பீர்கள் என்றுதான் சொல்லப்பட்டது.

### குருவானவர் கூறியது என்ன?

இதைக்கேட்ட குருவானவர்ஒருவர் "இன்று கிறீஸ்துநாதரின் பதிலாளியை மறுத்துவிடுமாறு என்னைக்கேட்கிறீர்கள்; நாளைகிறீஸ்து நாதரையே மறுதலித்துவிடும்படி என்னைக்கேட்பீர்கள்; உங்கள் கேள்விக்கு ஒருபோதுமே உடன்படமாட்டேன்; எனது ஆத்துமத்தைத் திருச்சபைக்காகஒப்படைக்கின்றேன்; எனதுஉடலை நான் நேசிக்கின்ற சீனுவுக்காகச் சித்திரவதை செய்யப்படுமாறு உங்களிடம் கையளிக்கின்றேன்" என்று பதிலளித்தார். இந்தவீரத்துவ குருவானவர் மரண தண்டனைக்குள்ளாயினர். திருச்சபைக்காகவும், சீனுவுக்காகவும் தமது ஆருயிரையும், உடலையும் அருந்தியாகஞ் செய்தார் அந்தப்பரிசுத்த குருவானவர்.

### பாப்பரசருக்காக மன்ருடுவோம்

மிஷன்உலகத்திலே இன்றுபாப்பரசர் அர்ச். பேதுருவானவரின் காலத்தில்போன்று நமது சற்சமயம் பரந்துவரும்காரணமாக இம்சிக்கப்பட்டும், எதிர்க்கப்பட்டும் வரும்போது,அதற்கு மறுப்பாக-மாற்றுமருந்தாக அவர்தலைமை தாங்கி வழிநடத்தும் விசுவாசப் பரப்புதல்சபை விருத்தியும், சிறப்பும்அடைந்து எங்கெங்கும் விசுவாசஒளி தீவிரமாகப் பரந்து, திருச்சிலுவைக்கொடி பறந்து கொண்டுபோக நம்மாலானதெல்லாம்செய்துவரவேண்டும். தமது தோள்களில் அவர் தாங்கியிருக்கும் உலக திருச்சபைகளின் பெரும் பாரச்சுமையை இலகுவாக்கும்படியாக அடிக்கடிநாமும் அவருக்காகமன்ருடிச் சர்வேசுரனிடம் பரிந்துபேசவேண்டும்.

### பரித்தியாகங்கள் செய்யவேண்டும்

அவர்மட்டில் நமக்குள்ள விசுவாசத்துக்கும்,பிரமாணிக்கத்துக்கும்சான்ருக அதிகமதிகம் பரித்தியாகங்கள்செய்து நமது செபங்களுக்குப்புத்துயிரும்,புதுப்பலமும் அளிக்கவேண்டும். நமது பரித்தியாகங்களால் விசுவாசப்பரப்புதல் சபைக்கென்று நாம் எதைக் கொடுத்தபோதிலும்அதெல்லாம் அவரிடமேபோகின்றது. அவரே அதைப் பகிர்ந்து உதவுகின்ருர். விசுவாசப் பரப்புதல் சபையானது உலகமுழுவதிலுமுள்ள சகல மிஷன் நாடுகளுக்குமே — எல்லா வேதபோதக நாடுகளுக்குமே உதவி செய்வதற்கென இருந்து வருகிறதுஎன்பதை நாம்எப்போதும் மனதில்கொண்டிருக்கவேண்டும். நம்மைஒறுத்துச் செய்கின்ற ஒவ்வோர்சிறிய பரித்தியாகச்செயலும் — அதாவது இரண்டொரு நாள் பத்திரிகைவாங்குவதை — சிகறெற், சுருட்டுப்புகைப்பதை — படக்காட்சி பார்ப்பதை — இனிப்புப்பண்டங்கள் உண்பதை — சொகுசானவாழ்க்கையை — தாம் பூலம்தரிப்பதை ஒறுத்துச் சேர்க்கும் சிறுதொகைப்பணத்தைப் பாப்பரசரின் விசுவாசப் பரப்புதல்சபைக்குக் கொடுப்போமானுல் அவர்மட்டில் நமக்குள்ள பற்றுதலுக்குப் பிறஅத்தாட்சியும் வேண்டுமேயோ?

### சபை செய்துவரும் உதவிகள்

விசுவாசப்பரப்புதல் சபைஎன்ருல், அது [illegible] கிறீஸ்துநாதரின் திருநாமத்தினலே உலகமுழுவதிலுமுள்ள சகல மிஷன்களையும்-சகலவேதபோதக நாடுகளையும் தாபரித்துப் பாதுகாக்க உதவிபுரிவதான பரிசுத்த பாப்பரசருக்கே உரிய-அவருக்கே உரிமையான உலகமிஷன் சபையேயாகும். இந்த மிஷன்களையெல்லாம் தாபரித்துப் பாதுகாக்க உதவி புரிகின்ற வேருேர் சபை உலகில் வேறெங்குமே இல்லை. இஃதொன்று மட்டுமே உலகிலுள்ள ஒவ்வோர் மிஷனுக்கும் உதவிபுரிந்து வருகின்றது. இந்தச் சபையினிடமிருந்து இன்று 1,00,000 மிஷனரிமாரும், 92,111 சாதாரண கத்தோலிக்க ஆசிரியர்களும், 82,863 உபதேசிமார்களும், 1,115 ஆஸ்பத்திரிகளும், 219 குஷ்டரோகர் சாலைகளும், 47,530 கலாசாலைகளும், 3,135 மருந்துச்சாலைகளும் உதவி பெற்றுவருகின்றன.

### சபையின் மகத்தானதொண்டுகள்

மேலும் கோவில்கள், குருமடங்கள், கலாசாலைகள் ஆதியனவற்றைக் கட்டுவதற்கும், குருத்துவ-கன்னிகாபதவிகளுக்கு மாணவர் - மாணவிகளைப் படிப்பிப்பதற்கும் இந்தச் சபை பணம் உதவுகின்றது. வருடம் ஒன்றுக்கு விருத்தாப்பியர்களும், பிணியாளர்களும், அனதர்களும், பாடசாலைப் பிள்ளைகளுமாக 5 கோடியே 30லட்சம்பேருக்கு மேற்பட்ட மக்களுக்கு இந்த மிஷன் நாடுகளெல்லாம் உதவியும், சேவையும் புரிகின்றன. ஆம், எத்துணை மாபெரும் சீவகாருண்ணிய தொண்டு! மனுத்தன்மைவாய்ந்த தொண்டு! சீவஇரக்கம்நிறைந்த செவ்வியதொண்டு! இத்தொண்டுகளெல்லாம் விசுவாசப் பரப்புதற்சபை அங்கத்தவர்களும், வேதப்பரப்புதலில் ஆர்வங்கொண்டுள்ள ஏனையவர்களும் சிறுதுள்ளி பெருவெள்ளமாக உபகரிக்கும் பணத்தைக்கொண்டே செய்யப்படுகின்றன.

### சபை அங்கத்தவர்களின் கடமைகள்

இந்தமாபெரும்தொண்டுகளில் நீரும் பங்குபற்ற ஆசிக்கின்றீரா? மிஷன்ஞாயிறு — அதாவது விசுவாசப் பரப்புதல் ஞாயிறு அண்மிக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே அச்சபையில் நீரும் ஒரு அங்கத்தவராக இப்போதே சேர்ந்துகொள்ளும். அங்கத்தவருக்குரிய இருகடமைகளையும் நிறைவேற்றிக்கொண்டு வாரும். ஏதும் தியாகஞ்செய்து வேதப் பரப்புதலுக்காக மாதம் 12½ சதம் அல்லது வருடம் 1 ரூபா 50 சதம் தருமம் கொடுத்து வாரும். தினமும் ஒரு பரமண்டல, ஒரு பிரியதத்த மந்திரமும், இவற்றுடன் அர்ச். பிரான்சிஸ் சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்; குழந்தை

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



### பாப்பரசரின் சுகவீனம்

பரிசுத்த பாப்பரசர் காத்திராப் பிரகாரம் சுகவீனமுற்று அபாயகரமான நிலைமையில் இருப்பதாக முன்வந்த தந்திச்செய்திகள் தெரிவிக்கலாயின. ஆனுல், அவர் தற்போது சற்றே குணமடைந்து வருவதாகவும், என்ருலும் அபாய நிலை இன்னும் நீங்கவில்லையென்றும் பிந்தியசமாச்சாரம் தெரிவித்திருக்கிறது. அவர் தீவிரமாய்ப் பூரண சுகமடையுமாறு உலக முழுவதிலுமுள்ள அவரது ஞான மக்கள் விசேஷவிதமாக மன்ருடி வருகின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லே அன் பிறே
# LEY & FREY


## முதன்மைபெற்ற வீட்டுப்பறவைகள், மிருகங்களின் உணவு வியாபாரிகள்


கொழும்புமாநகரிலே அரைநூற்றண்டுகளுக்குமேல் நாம் பெற்றுள்ள அனுபவத்தைக்கொண்டு ஆடுகள், மாடுகள், கோழிகள் முதலாம் நீங்கள் வளர்க்கும் சீவபிராணிகளுக்கு உணவூட்டுவதற்கும், பேணிப் பராமரிப்பதற்குமாக உங்களுக்குத் தேவைப்படுகிறவைகளையெல்லாம் உதவும் சேவையில் தற்போது நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

(வீட்டுப்பறவைகள், மிருகங்கள் ஆதியவற்றின் உணவு நிபுணர்கள்)

உலகப்பிரசித்திபெற்ற (ஐரோப்பிய - அமெரிக்க) மருந்துகளை இருப்பில் வைத்திருக்கிறோம்.
பெரும்பாலான பாடசாலைகளும், மற்றும் மதஸ்தாபனங்களும் நம்மை ஆதரிக்கின்றன.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லிவீதி, 21/2 எனும் இலக்கத்தில்
தகுந்த ஆயத்தங்களுடன் தற்போது ஒரு கிளை ஸ்தாபனத்தைத் திறந்திருக்கிறோம்.





### பறவைகளுக்கு

| | | ரூத். | ரு. ச. |
|---|---|---|---|
| முட்டைவர்த்தினி: 1-ம் நம்பர். முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 26—00 |
| முட்டைவர்த்தினி: 2-ம் நம்பர். முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 24—00 |
| முட்டைசுரபி: முட்டைஇடும் கோழிகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 21—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 22—00 |
| சீவசுரபி: வளரும்பறவைகளுக்கான தாதுப்பொருட்கலவை | — | 100 | 19—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 20—00 |
| கொழுக்கும் தீனி: சாப்பாட்டுக்கு வளர்க்கப்படும் பறவைகளுக்கான விசேடகலவை உணவு | — | 100 | 19—00 |
| குஞ்சுவர்த்தினி: குஞ்சுக்கான தானியக்கலவை | — | 100 | 26—00 |
| குஞ்சுச்சுரபி: சிறுகுஞ்சுகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 23—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 24—00 |
| வான்கோழி உணவு: முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19—00 |
| தாரா, வாத்து உணவு: முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19—00 |

### மிருகங்களுக்கு

| | | ரூத். | ரு. ச. |
|---|---|---|---|
| அமுதசுரபி: 1-ம் நம்பர். பாற்பசுக்களின் கலவைஉணவு. பிண்ணுக்கு, துவரஉமி, உழுந்துமூக்கு, மைசூர்உமி, கடலைமா, கடலைக்கோது, கோதுமைத்தவிடு, உலோகச்சத்துக்கள், சோழம் என்பன விகிதசாரமாகக் கலக்கப்பட்ட உணவு | — | 100 | 18—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 19—00 |
| அமுதசுரபி: 2-ம் நம்பர். | — | 100 | 17—00 |
| எருத்துமாட்டுத்தீனி: வண்டிஇழுக்கும் மாடுகளுக்கும், வசப்பிழையான எருதுகளுக்குமான கலவைஉணவு | — | 100 | 17—00 |
| சாதாரண கலவை: 1-ம் நம்பர் | — | 100 | 15—00 |
| சாதாரண கலவை: 2-ம் நம்பர் | — | 100 | 14—00 |
| மீன் தீனி: வீட்டில் வளர்க்கப்படும் மீன்களுக்கான உணவு சிக்கனமான அளவில் சிறிய டப்பாக்களில் அடைக்கப்பட்டது. | | ¼ ருத்தல் | —50 |

—※—

| | | | |
|---|---|---|---|
| மீன்சத்து: கலவைகளுக்கு | — | 1 | —30 |
| சுண்ணக்கலவை: | — | 1 | —30 |
| எலும்புச்சத்து: சுத்திசெய்யப்பட்டது | — | 1 | —50 |
| மீன் ஈரல் நெய்: | | ஒரு கலன் | 18—50 |
| மீன் ஈரல் நெய்: | | ஒரு போத்தல் | 3—25 |

மேலும் தேவையான விவரங்களுக்கு:

## லே அன் பிறே

தலைமை ஸ்தாபனம்:
65, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.
T. Phone: 2751. — T. Gram: "EDRAJ"

கிளை ஸ்தாபனம்:
21/2, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

---

### நெசவு தொழிற்சாலைப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தோலிக்கரும், கத்தோலிக்கர்அல்லாதோருமான தொழிலாளர்களால் செபஞ்செய்வதற்கெனப் பாவிக்கப்பட்டு வருகிறது. அதனல் இது ஞான விஷயங்களில் மாத்திரமல்ல, உலகவிஷயங்களிலுமே உலகத்துக்கு ஓர்நல்ல முன்மாதிரிகையாய் விளங்குகின்றது.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயஇரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் அன்பு கனிந்த சகாயத்தாலும், அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்தாலும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாருடைய வேண்டுதலாலும் நான்இடைவிடாது கெஞ்சிக்கேட்ட மன்றாட்டை, எந்தவித இன்னல்களும், இக்கட்டுகளும் நேராவண்ணம்பாதுகாத்து, அனுகூலமாக்கித்தந்தருளியதற்காக என்நன்றியை இச்சிறுவார்த்தைகள்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவர்களின்நாமம் என்றும்புகழப்படுவதாக. இன்[illegible] உங்களுடைய அன்பினாலும், ஆதரவினாலும், பாதுகாவலினாலும் சகல இக்கட்டுகளிலிருந்து என்னைக் காப்பதுடன், நான் கேட்ட இதரமன்றாட்டுக்களும் அனுகூலமாக வேண்டுமென்றும் மன்றாடுகிறேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கப் பிந்தியமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

— ஓர் பக்தன்

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயநாயகியின் விசேஷ அருளினல் என்விண்ணப்பங்கள் கிடைக்[illegible] உடனடியாகப் பிரசித்தப்படுத்தாதமைக்கு மன்னிப்புக் கோருகின்றேன். இன்னும் நான் கேட்ட சில விண்ணப்பங்களையும் அனுக்கிரகிக்குமாறு தயவாக வேண்டுகின்றேன்.

பேசாலை மாதாவின் மைந்தன்

### நன்றியறிதல்

யேசுவின் திருஇருதயஇரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதாவின் வேண்டுதலினாலும்என்காலில் இருந்த ரணம் சம்பூரணமாய்க் குணமானதற்கு என் மனமார்ந்த நன்றித்துதியைத் தெரிவிக்கிறேன்.

S. X. F.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## ஏழுஅடி உயரமான மெழுகுவர்த்தி

சுதந்திர அயர்லாந்தின் தலைப் பட்டணமாகிய டபிளின் நகரிலுள்ள தேவமாதாவின் சங்கீத விழாச் சபையினரால் அன்று லூர்துபதியிலே ஏழு அடி உயரமான மெழுகுவர்த்தியொன்று ஊர்வலமாகத் தாங்கிச்செல்லப்படலாயிற்று. இந்த மெழுகுவர்த்தியானது சபையின் பிரதம தலைவரான வண. ஏ. கிறிவ்வித் சுவாமியாருக்கு டபிளின் நகரிலுள்ள லாலர் கம்பெனியின் தலைவர்களில்ஒருவரான திரு லியம் கவனு அவர்களால் அன்பளிப்புச் செய்யப்படலாயிற்று. இந்தக் கம்பெனியால் வார்க்கப்பட்ட மிகப் பெரிய மெழுகுவர்த்தி இதுவாகும். அநேக மாதங்களுக்கு லூர்துபதியிலே அது எரிந்து கொண்டிருக்கும்.

## தென்சமுத்திரத்தின் மத்தியில்

"உலகின் அடிப்பாக"த்திலே — அதாவது தென்சமுத்திரத்தின்மத்தியில் கத்தோலிக்க சிற்றாலயம்ஒன்று விரைவிலே நிறுவிகிற்குமென்று பரீஸ்நகரிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. மடகஸ்கார் தீவிலிருந்து படகின் மூலம் பன்னிரண்டுநாள் பிரயாணதூரத்திலுள்ள கெர்குவலென் தீவுகளுள் ஒன்றிலே தற்போது ஆராய்ச்சிவேலைநடத்தும் பிரான்சிய விஞ்ஞான கோஷ்டி ஒன்றால் இந்தக்கோவில் கட்டப்பட்டுவருகிறது. இந்த ஆராய்ச்சிக்கோஷ்டியின் ஞான விசாரணைக் குரவரும், டக்றருமான வண. அன்ட்றே போக் சுவாமியார் தூதுக்கோஷ்டியைச் சேர்ந்த அங்கத்தவர்களின் துணையோடு இந்தக் கோவிலைக் கட்டும்பணியில் ஈடுபட்டிருக்கின்றார்.

## 'புதுமை'ப் பாலியர் குருவாயினர்

அநேகவருடங்களுக்குமுன் ஓர்பாலியராயிருந்தபோது சயரோகங்கண்டு வருந்திப் புதுமையாகக் குணமடைந்தஒருவர் சமீபத்திலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றுப் போர்த்துக்காலிலே லெகா டி பால்பீறியா எனுமிடத்திலுள்ள பாத்திமா நாயகியின் கோவிலிலே முதற்பூசைப்பலி ஒப்புக்கொடுக்கும் அதிர்ஷ்டத்தைப் பெறலாயினர். ஓர் பாலியராய் இருந்தபோது வண. ஜுவக்கிம் டா சில்வா என்ற இந்தப் புதியகுருவானவர் தமதுகால்களிலுள்ள எலும்புகளைத் தாக்கி வேதனையை உண்டுபண்ணிய சயரோகங்கண்டுவருந்தினர். ஆனால், 1693-ம் ஆண்டு தென்னிந்தியாவிலே வேதசாட்சியாகக் கொலையுண்ட ஓர் யேசுசபை மிஷனரியான அர்ச். அருளானந்தரின் (ஜோண் டி பிறிற்றோ) சலுகையாலே இவர் புதுமையாகக் குணமடைந்தார். 1947-ம் ஆண்டு அர்ச். அருளானந்தருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதற்கு வழிபண்ணிய அதிகாரபூர்வமான புதுமைகளில் வண. டா சில்வா சுவாமியார் அற்புதமாகக் குணமடைந்தமையும் ஒன்றாக எடுத்தாளப்பட்டது.

## முடவரின் லூர்துபதி யாத்திரை

தனது குழந்தைப்பராயமுதல் முடமாயுள்ளவரும், இளம்பிள்ளைவாதங்கண்டு வருந்துகிறவரும், இன்னுமே பாதுகாப்புக்குரிய இரும்புச்சாதனங்களை அணிந்திருப்பவருமான ஒருவர் சமீபத்திலே கால்நடையாக லூர்துபதி போய்ச்சேர்ந்தயாத்திரிகர்களில் ஒருவராய்க் காணப்படலாயினர். இவர் 27 வயதுடைய ஓர்ஆஸ்திரிய தட்டாரான கேட்அதிங்கர் என்பவரே. இவர் சென்ற சித்திரைமாதம் 30-ந் தேதியன்று வீயன்னு நகரிலிருந்து புறப்பட்டு 1,355 மைல் தூரத்தையும் கால்நடையாகவே தாண்டிச்செல்லலாயினர். 1945-ம் ஆண்டு ருஷியாவுக்கு நாடுகடத்தப்பெற்ற தனது பெற்றோருக்காக மன்றாடுவதற்காகவே இந்தயாத்திரையை இவர் நடத்தலாயினர். அதுமுதல் அவர்களைப்பற்றிய செய்தி யாதொன்றுமே இவருக்குக் கிடைக்கவில்லை. திரும்பவும் இவர் நால்நடையாகவே ஆஸ்திரியாவுக்குச்செல்ல எண்ணுகின்றார். கால்நடையாகச் சென்ற மற்றும்யாத்திரிகர்களில் பெல்ஜியத்திலிருந்து போன செவிடும், ஊமையுமானஒருவரும் அடங்குவர். செவிடர்கள், ஊமர்களின் யாத்திரையில் கலந்துகொள்ள இவருக்கு 34 நாட்கள் பிடித்தன.

## கருதினல் ஆண்டவர் வேண்டியதில்லை

ஹங்கேரியிலே புடாபெஸ்ற் நகரிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்திலிருந்து கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவரை வெளியாக்கிவிடுமாறு ஹங்கேரிய கம்யூனிஸ்தஅரசாங்கம் வழிவகை தேடுகிறதென்று சமீபத்தில் அறிக்கைகள் வெளியாயின. ஆனல், அன்று சனிக்கிழமை நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டிலே அரசாங்க அதிகாரிஒருவர் அந்தஅறிக்கைகளை மறுத்து, அரசாங்கமும், சனங்களும் அங்கேஅவர் இருந்துவருவதை முற்றாகவே முக்கியமற்றதாகக்கருதி அலட்சியமாய் இருந்துவருவதாகத் தெரிவித்திருக்கின்றார். "கருதினல்ஆண்டவரைச் சுவாதீனமாக்கிவிடுமாறு அமெரிக்கரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதை நாங்கள் அறிவோம்; ஆனல், அவைகள் பிரதிகூலமாயின" என்றும் அவர் கூறலாயினர். கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவர் 1956-ம் ஆண்டு ஐப்பசிமாதம் ஹங்கேரியில் நடைபெற்ற சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்போது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஆனல், கலகத்தில் ஈடுபட்ட தேசாபிமானிகளை அடக்கி ஒடுக்கி விடுமாறு ருஷிய தாங்கிகள் புடாபெஸ்ற் நகரில் பிரவேசித்தபோது அவர் அங்குள்ள அமெரிக்க தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்துகொண்டார்.

## லூர்துபதியிலிருந்து திரும்புகையில் கண்பார்வை அடைகின்றுள்

லூர்துதிருப்பதியிலே சமீபத்தில் இளவயதுள்ள ஓர் ஸ்பானிய பெண்மணி அடைந்துள்ள ஆரோக்கியமானது விஞ்ஞானத்தின்எல்லைகளுக்கு அப்பாற்பட்டதென்று கண்வைத்திய நிபுணர் அறிக்கையிட்டிருக்கின்றார். மதிரித்நகரின் ஓர்முன்னைநாள் காரியதரிசியான செல்வி மரியா ஒசோனியோஎன்ற இந்தஇளம் பெண்மணி தனது கண்களில் உண்டான காயங்கள் ஆறாமல் வளர்ந்து கண்பார்வையை இழந்து குருடியாயினள். மறுபடியும் அவள் பார்வையடையுமாறு செய்த சிகிச்சைகளெல்லாம் பலனற்றுப் பிரதிகூலமாயின. கடைசியாகஅவள் லூர்துதிருப்பதி சென்றாள். பின்னர் அங்கிருந்து திரும்பும் வழியிலே அவள் வலிப்புக்கண்டு மூர்ச்சையடைந்தாள். அப்போது உடன் யாத்திரிகர்கள் லூர்துபதியின் அற்புத நீரூற்றுத் தண்ணீர் கொண்டு அவளுடைய கண்களை நீராட்டினர்கள். பின்னர் அவள் மூர்ச்சைதெளிந்து எழுந்தபோது பார்க்கக்கூடியவளானாள். 1954-ம்ஆண்டு இவளைப் பரிசோதனை செய்தவரும், பார்சலோனு நகரிலுள்ள கண்ணுரோக்கிய வைத்தியசாலைஒன்றின் தலைவருமான டக்றர் இக்னசியோபறங்கர் அவர்கள் அவள் குணமடைந்துவிட்டதாக அத்தாட்சிப்பத்திரம் வழங்கியிருக்கின்றார்.

## முதலாவது கார்மேல் ஆலயம்

கார்மேல்சபையின் சரித்திரத்தில் முதலாவதான கோவிலைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து, கார்மேல் குன்றின் உச்சியிலுள்ள தற்போதைய கார்மேல்சபைத் தாய்மடத்திலிருந்து ஏறக்குறைய இரண்டரைமைல் தூரத்தில் அகழ்ந்து கண்டுபிடித்திருக்கின்றனர். தேவதாயாருக்கு அர்ப்பணஞ் செய்யப்பெற்ற இந்தக்கோவிலானது கார்மேல்சபையார் தங்கள் ஞான பரம்பரைக்கு முதல் முன்னேடியென்று கண்டுபிடித்திருக்கின்ற பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசியான அர்ச். எலியாஸின் நீரூற்றுக்குச்சமீபமாயுள்ள குன்றின் மேற்குப்புறத்திலே வாடி–எஸ்–சியா என்ற நீரோட்டப் பள்ளத்தாக்கில் இருக்கின்றது. தற்போது வெளியாக்கப்பட்டிருக்கும் இந்தக் கோவிலே தேவதாயாருக்கு அர்ப்பணஞ் செய்யப்பெற்ற ஆதியான சிற்றாலயமாகும். அப்போது ஜெருசலேமின் பத்திரியாக்குவாய் இருந்துவந்த நான்காவது ஊர்பான் எனும் பாப்பானவரால் 1263-ம் ஆண்டு விடுக்கப்பட்ட அதிகார பத்திரத்தைத் தொடர்ந்து இந்தச்சிற்றாலயம் விசாலமாக்கி அலங்கரிக்கப்படலாயிற்று.

## பாப்பரசரின் மாட்டுப் பண்ணை

ரோமைநகரிலிருந்து தெற்கே சுமார் 15மைல் தூரத்தில் பாப்பரசரின் மாட்டுப்பண்ணை இருந்துவருகிறது. இந்தப் பண்ணையை அவர் ஸ்கொத்திலாந்திலுள்ள அபர்டீன் – அங்குஸ் மாடுகளின் மந்தைஒன்றாலே விருத்தியாக்கப் போகின்றார். இத்தாலியிலே மாமிசத்துக்கான மாடுகளில்லாக் குறையை நிவிர்த்திசெய்ய அவர் எடுக்கும் முதல்நடவடிக்கை இதுவாகும். இந்த மந்தை பெருகுமிடத்துத் தங்கள்சொந்தமந்தைகளை ஆக்கக்கூடியவர்களென்று கருதப்படும் வறியகமக்காரருக்கு எருதுகளும், பசுக்கன்றுகளுமாக விலைக்கல்ல, ஆனல், இலவசமாகக்கொடுக்க எண்ணுகின்றார். இன்னும் ஆஸ்பத்திரிகள், அனுதர்சாலைகள், விருத்தாப்பியர்சாலைகள்முதலாம் ஸ்தாபனங்களுக்கும் அவைகள் வழங்கப்படும்.

## 2,000 குருமாரை அபிஷேகஞ்செய்த மேற்றிராணியார்

ஐக்கிய அமெரிக்க தேசத்திலுள்ள மற்றெந்த அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரைக் காட்டிலும் அதிகமானேரைக் குருத்துவாபிஷேகஞ் செய்துள்ளவரும், வாஷிங்ரன்நகர துணை மேற்றிராணியாருமான மகாவந். ஜோண் மைனமாரு ஆண்டவர் சமீபத்திலே தமது மேற்றிராணித்துவாபிஷேக 30-ம் ஆண்டு நிறைவுவிழாவை அமைதியாகக் கொண்டாடினர். பால்த்திமோர், வாஷிங்ரன் அதிமேற்றிராசனங்களிலே இவர் திருத்தொண்டாற்றியுள்ள முப்பதுஆண்டுகளிலும் 2,000 பேருக்கு மேற்பட்ட குருத்துவ மாணவர்களுக்குத் தமதுகரங்களால் குருப்பட்டம் அருளியிருக்கின்றார். தற்போது 79 வயதுடையவரான இந்தமேற்றிராணியார் பால்த்திமோரில் பிறந்தவர். காலஞ்சென்ற கருதினல் ஜேம்ஸ் கிபன்ஸ்ஆண்டவரால் 1902-ம் ஆண்டு குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றார்.

## நெசவு தொழிற்சாலைப் பெருநாள்

இங்கிலாந்திலே டேர்பி நகரிலுள்ள நெசவுதொழிற்சாலை ஒன்றின் நெசவுதறிகளின் மத்தியிலே நொட்ரிங்காம்நகர எல்லிஸ் மேற்றிராணியார் அன்றுதிங்கட்கிழமை பெரியபாடற்பூசை நிறைவேற்றினர். ஏணெஸ்ற் ரேர்ணர் குழுவின் ஸ்பாலேன்என்ற இந்தத்தொழிற்சாலை அன்றுதினம் தனது "தொழிற்சாலைப் பெருநாளை"க் கொண்டாடியது. இதனை முதன்மைவகித்துநடத்துகிறவரான திரு. அலன் ரேணர் அவர்கள் அநேக வருடங்களாக அதனைப் பாப்புமார் விடுத்த சமூகதர்ம சாதாரண நிருபங்களில் காட்டியுள்ள முறைப்படி நடத்திவருகின்றார். இதிலே முகாமைவகித்து நடத்துவதிலும், ஆதாயத்திலும் தொழிலாளர்களும் பங்குபெறுகிறார்கள். இந்தத்தொழிற்சாலை ஓர்சிற்றாலயத்தைக் கொண்டுள்ளது. இது

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசிமாதம்

**பொதுக்கருத்து:** பொது உணவு விடுதிகளிலும், தங்குமிடங்களிலும் தொழில்ஆற்றுகிறவர்களின் ஆன்ம இரட்சணியத்திற்காக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** சுதேசகுருமாரின் அபிவிர்த்திக்காகப் பாப்பரசர் ஏற்படுத்தியுள்ள அர்ச். இராயப்பர் சபைக்குச் சகலவிசுவாசிகளும் ஆக்கமிகுந்த ஆதரவு அளிக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.


சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 9-ந் திகதி


## ஆண்டகை அவர்களுக்கு நல்வரவாகுக!

யாழ்ப்பாணத் தமிழ்மக்களிலே இரண்டாவதாக மேற்றிராணித் துவபதவிக்கு உயர்த்தப்பெற்ற தமிழ்ப்பெருமகனும், மலாய்நாட்டிலே கோலாலம்பூர் மேற்றிராணியாருமான மகாவந். டொமினிக் வேந்தர்கோன் ஆண்டகை அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகம் செய்யப்பெற்றபின் ஐரோப்பாவிலிருந்து மலாயாவுக்குத் திரும்பும்வழியிலே நிகழும் ஐப்பசிமாதம் 12-ந்திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத் தமிழ்மண்ணிலே முதன்முறையாகக் கால்ஊன்றவிருக்கிருரெனும்சுபசெய்தியை அனைவருக்கும்மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம். ஆண்டகைஅவர்கள் லூர்துபதிக்காட்சிகளின் நூற்ருண்டுவிழாவாகிய இப்புனித வருடத்திலே மலாய்நாட்டு யாத்திரிகர்களின் கோஷ்டிஒன்றை அத்திருப்பதிக்குத் தலைமைவகித்துநடத்திச்சென்று, வத்திக்கான்மாளிகைசென்று தமது காலாந்தர பாப்பரசர் பேட்டியைப் பெற்றுக்கொண்டு, அநேக ஐரோப்பியநாடுகளையும், பரிசுத்தநாடாகிய பலஸ்தீனுவையும் தரிசித்துவிட்டுத் தம்முடைய மேற்றிராசனத்துக்குத் திரும்பும் வழியிலே தமது ஜனனநாடாகிய யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யவிருக்கின்ருர்.

ஆண்டகைஅவர்கள் மாதகல் பதியிலே பிரபல்யமாக வாழ்ந்திருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் மாட்டீன் வேந்தர்கோன் அவர்களினதும், ஸ்ரீமதி ஜேட்றூட் வேந்தர்கோன்அவர்களினதும் செல்வப்புதல்வர். யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார்கல்லூரியின் பிரஸ்தாபம்பெற்ற தலைமையாசிரியராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ்.ஏபிரகாம் அவர்களின் பெளத்திரராவர். ஆண்டகை வேந்தர்கோன்அவர்களும் சம்பத்திரிசியார்கல்லூரிப் பழையமாணவராவர். இற்றைக்குமூன்றுவருடங்களின்முன் இவர் கோலாலம்பூரின் முதல் மேற்றிராணியாராக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருந்தார். ஓர்மேற்றிராணியார் என்றமட்டிலே தமதுசகோதரிகள் இருவரையும், மற்றும்அநேக சுற்றத்தவர்களையும் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணத்துக்கு இவர் விஜயஞ்செய்வது இதுவே முதன் முறையாகும்.

மகாவந். வேந்தர்கோன் ஆண்டகைஅவர்கள் யாழ்ப்பாணத்திலே ஒருவாரகாலம் தங்கியிருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. இங்கே இவர்தங்கியிருக்கும்போது, யாழ்ப்பாணமேற்றிராசன ஐக்கியசங்கமும், மலாய்நாட்டில் உத்தியோகம்வகித்திருந்து இளைப்பாறித் தற்போது யாழ்ப்பாணத்தில் சஞ்சரித்துவருகின்ற யாழ்ப்பாணமலாயர்சங்கமும், மாதகல், நாரந்தனை விசாரணைப்பங்குகளும் அவருக்குச் சிறந்தவரவேற்பு உபசாரங்கள் நடத்தவிருக்கின்றன. சம்பத்திரிசியார்கல்லூரியின் வருடாந்தபரிசளிப்புவிழாவிற்கும் பிரதம விருந்தாடியாக இவர்சமூகமளிப்பாரென அறிகின்றோம். ஆண்டகைஅவர்களின்வரவால் நாமும் அகமகிழ்ந்து, முகமலர்ந்து, வருக! வருக! நாமெல்லாம்கண்டு உளங்களிக்கத் தமிழ்ப்பெருமகனேவருக! மலாய்நாட்டிலே முதற்பெரும் வைதிகபதவி வகித்து யாழ்ப்பாணத்தமிழ்மக்களுக்குப் பெரும்புகழ் ஈட்டிக்கொடுத்த தவப்பெரும்புதல்வ எழுந்தருள்க! என்று நல்வரவு கூறுகின்றோம்.

---

### அன்று கண்ட

## ஆனந்த காட்சி

அன்றிரவு இலேசாக மழை பெய்யத் தொடங்கியது. எனது வீட்டைநோக்கி நடந்தேன். வழியிலே மழைஅதிகமாகிவிட்டதால் பூட்டப்பட்டிருந்த ஒருவீட்டின் வெளித்திண்ணையில் ஒதுங்கினேன். என் அயல்வீட்டுக்காரனும் எங்கேயோசென்றிருந்தவன் மழையிலே அகப்பட்டுக்கொண்டதால், அவனும்என்னோடு அதே வீட்டு வெளித்திண்ணையில் அடைக்கலம் புகுந்தான்.

நாங்கள்இருவரும் திண்ணையில் நின்று சப்தமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒருவாலிபர் மெதுவாகக் கதவைத் திறந்து, "ஏன் வெளியேநிற்கிறீர்கள்; இப்படி உள்ளேவாருங்கள்; ஆனுல், சப்தம்செய்யாதீர்கள்" என்று சொல்லிவிட்டுப் போனுர். நாங்களும் மிகுந்தநன்றியுடன் வீட்டுக்குள்சென்று, கதவைச்சாத்திக்கொண்டு ஓர்புறமாக நின்ருேம். பேசவில்லை. வீட்டினுள் ஏதோ ஒழுங்கான சப்தம் கேட்டது. முதலில் சற்றேபின்வாங்கினுேம். பின்னர் சப்தம்வந்த இடத்தை நோக்கிப்போனுேம். அந்தஅறையில் ஒருசிறுபீடம் சோடிக்கப்பட்டிருந்தது. அதற்குமுன் அந்தக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் செபித்துக்கொண்டிருந்தார்கள். சிறுகுழந்தைஒன்று பக்கத்தில்படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. நான்கு அல்லதுஐந்து வயதுள்ள இன்னெருகுழந்தை தனதுதாயின்பக்கத்தில் அரைத்தூக்கமாய் அமர்ந்திருந்தது. நாலாபுறமும் பார்த்தேன், பீடத்தையும் பார்த்தேன், செபித்தவர்களையும் பார்த்தேன். எளிய குடும்பமாயினும், சாமாதானமும், சந்தோஷமும்நிறைந்த குடும்பமென்று என்மனதில் பட்டது.

செபம்முடிவடைகிற சமயம்வந்ததும், நாங்கள்இருவரும் மெதுவாகநகர்ந்து, திரும்பவும்கதவண்டைபோய் நின்ருேம். சிறிதுநேரத்தில் செபமும்முடிந்தது. நான்குஅல்லது ஐந்துவயதுஇருக்கும் என்றுசொன்ன குழந்தையைப்பார்த்து அவளுடையதாய்: "மேரி, என்ன தூக்கம் வருகிறதா? செபநேரத்தில் தூங்கிக்கொண்டு தானே இருந்தாயே" என்று கூறிவிட்டு, ஒருசிறுபாயை விரித்துப் படுத்துக்கொள்மேரி; மாதாவைப்பார்த்து மூன்றுபிரியதத்தமந்திரம் சொல்லம்மா எனப் பகர்ந்துவிட்டு, மேரியோடு தானும் மூன்றுபிரியதத்த மந்திரம் சொல்லிப் பின்னர் "யேசுவே இரட்சியும்"என்னும் மனவல்லயச் செபத்துடன் பிள்ளையைத் தூங்கவைத்தாள்.

அச்சிறுகுழந்தை தனதுமழலைச் சொற்களால் பிரியதத்தமந்திரம் சொன்னது செவிக்கு மகாஇன்பமாய் இருந்தது. அந்தக்குடும்பத்தில்விளங்கிய அமரிக்கையானசந்தோஷம்என்மனதைக்கவர்ந்தது. இப்படிப்பட்டகுடும்பத்தில் சமாதானத்துக்குக் குறைவுஏற்படாதென்றும், ஏற்பட்டாலும் இராச்செபத்திற்குமேல் நீடிக்காதென்றும் தோன்றியது. அவ்வேளை மழைசற்றே நின்றதைக் கண்ட நாங்கள் தங்கஇடம்தந்தவர்களுக்கு நன்றிதெரிவித்துவிட்டு எமது எமதுஇல்லம் ஏகினுேம்.

என்னுடன் மழைக்குஒதுங்கிய என்அயல்வீட்டுக்காரனின் புத்தியில் இந்தக்காட்சியைக் கண்டபின் என்னயோசனைகள் ஊசலாடினவோதெரியாது. என்னவாயிருந்தாலும், மறுநாள்அவன்வீட்டில் சாதாரணமாகக் கணவனுக்கும், மனைவிக்குமிடையே ஏற்படும்சண்டைகளால் நிர்ப்பாக்கியமாயிருந்த அந்தக்குடும்பம் முழுதும்மாறிவிட்டதுபோல் தோன்றியது. என்மனைவியும் இதைக் கவனித்து என்னிடம்கூறவே, ஒருநாளிரவு அக்குடும்பத்தில் என்னநடக்கிறதென ஆராய்ந்தேன். நான்பார்த்தது என்னவென்று நினைக்கிறீர்கள்? மழைபெய்த அன்றிரவு நான்ஒதுங்கிய வீட்டில் கண்டஆனந்தகாட்சியே. இக்காட்சியைக்கண்குளிரக் கண்டு ஆனந்திக்க விருப்பமுள்ளவர்கள் இரண்டுவீடுகளிலும் இன்றைக்கும் இந்தக்காட்சியைக் காணலாம். இரண்டாவதான வீட்டிற்கு அடுத்தவீட்டிலும் பார்க்கலாம்.

இரவிலே படுக்கப்போகுமுன் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லோரும்ஒன்றுசேர்ந்து சிறிதுநேரமாவது பொதுவில் இராச்செபம் செய்வது குடும்பங்களுக்குப் பெரிதும்நன்மை பயக்குமென்பதில் சந்தேகமில்லை.

M. P.

---

### நன்றித்துதி

யேசுவின் திரு இருதயம் எங்களுக்குச் செய்துவரும் எண்ணிக்கையற்ற உபகாரங்களுக்கும், நாங்கள் கேட்ட சகல காரியங்களும் அனுகூலமாகி வருவதற்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கிருேம்.

S. X. F.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## PRAYERS FOR THE RECOVERY OF OUR HOLY FATHER THE POPE

The prayers of the clergy and the faithful are requested for the recovery of Our Holy Father the Pope. The following prayers are ordered in the Jaffna Diocese by His Lordship the Bishop:—

1. In all our Schools the children will recite before the beginning of classes one decade of the Rosary and the Salve Regina.
2. In all our Parishes a Holy Hour with special prayers for His Holiness' recovery will be conducted as soon as possible.
3. Our Catholics are exhorted to recite the Family Rosary daily for this intention.
4. Oratio Imperata uti pro re gravi PRO INFIRMO.

\+ J. Emilianus Pillai, O.M.I.,
8-10-58. Bishop of Jaffna.

---

### பரிசுத்தபிதாவாகிய பாப்பரசர் குணமடையும்படியாகச்

## செபங்கள்

நமது பரிசுத்தபிதாவாகிய பாப்பரசர் குணமடையும்படியாகக் குருமாருடையவும், விசுவாசிகளுடையவும் செபங்கள் ஆவசியகம் வேண்டப்படுகின்றன. யாழ்ப்பாணமேற்றிராசனத்திலே பின்வருமாறு செபங்கள் சொல்லப்படவேண்டுமென்று நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் கற்பித்திருக்கின்ருர்.

1. சகலபாடசாலைகளிலும் வகுப்புகள்ஆரம்பமாகுமுன் பிள்ளைகள் செபமாலையில் ஒருகாரணிக்கமும், கிருபைதயாபத்து மந்திரமும் சொல்லவேண்டும்.
2. பாப்பரசர் குணமடையும்படியாக நம்முடைய சகலவிசாரணைப் பங்குகளிலும் இயன்றமட்டும் கூடிய கெதியிலே விசேஷசெபங்களுடன் திருமணித்தியாலம் நடத்தப்படவேண்டும்.
3. நமதுகத்தோலிக்கமக்கள் இதே கருத்துக்காகத் தினமும் குடும்பசெபமாலை சொல்லிவருமாறு நன்மதிகூறித் தூண்டப்படுகின்ருர்கள்.
4. நோயாளருக்கான கடமைச் சபைச்செபம் சொல்லப்படவேண்டும்.

\+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்
8–10–58

---

● "ஒருகாலத்தில் எனக்குத் தேவையானஉடைகளை நூல்நூற்று நானேதயாரித்துவந்தேன்; ஆனுல், நான் ஜனுதிபதியாகவந்தபின் அதிகமானஉடைகள் எனக்குத்தேவைப்படுகின்றன; அதனுல் எனதுஉடைகளை நானேதயாரித்துக்கொள்ள இப்பொழுது என்னுல்முடிவதில்லைஎன்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று ஜப்பானுக்கு விஜயஞ்செய்துள்ள இந்தியஜனுதிபதி டக்றர்இராஜேந்திர பிரசாத் அங்கு ரோக்கியோநகரில் பேசியபோது தெரிவித்திருக்கின்ருர்.

● ரோமாபுரியிலுள்ள பாப்பரசரின் போலிஷ்குருமடத்தில் 17வாலிப போலிஷ்குருத்துவமாணவர்கள் தற்போது குருப்பட்டத்துக்குப் படித்துவருகின்ருர்கள். சமீபத்தில் மேலும் 10மாணவர்கள் அதில் சேர்ந்துபடிக்க வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. போலாந்திலே ஸ்ராலினிய ஆட்சிகாலத்தில் குருப்பட்டத்துக்குப் படிக்கக் குருத்துவமாணவர்களைப் பிறநாடுகளுக்குஅனுப்புவது விலக்கப்பட்டிருந்தது. ஆயினும்இப்போது இந்தவிலக்கு நீக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

### மொழிப்பிரச்சினையும் தமிழரும்

"மொழிப்பிரச்சினையைத் தீர்த்து விட்டதாக அரசாங்கம்கூறுமானல் அது தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதாகும்; தமிழ்மக்கள் தன்மானத்தோடு ஏற்றுக்கொள்ளும்முறையில் மொழிப்பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும்" என்று நுவரெலியிலே சர்வோதயசதுக்கத்தில் நடந்தேறிய இலங்கை ஜனநாயககாங்கிரஸின் 18-வதுவருடாந்தமகாநாட்டில் ஓர் பிரேரணை நிறைவேறியிருக்கிறது. தமிழ்மக்கள்மீது பலவந்தமாக ஒரு மொழியைத் திணிப்பதன்மூலம் பிரச்சினையைத் தீர்த்துவிடமுடியாது; ஆகவே, இப்பிரச்சினையில் சிரத்தைகொண்டவர்கள் அனைவரும் ஒருங்குகூடி வட்டமேசை மகாநாடு ஒன்று நடத்தி இப்பிரச்சினையை மனிதஉரிமைஅடிப்படையிலே தீர்த்துவைக்குமாறு அப்பிரேரணையிலே வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

### தேசீயவிடுமுறைநாட்கள்

இலங்கையில் ஏழுதினங்களையே தேசீயவிடுமுறைநாட்களாக்க வேண்டுமென அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்வதென்று மந்திரிசபையின் உபகம்மிற்றிதீர்மானித்திருக்கிறது. சுதந்திரதினம், சிங்கள-இந்துப் புதுவருடதினம், மேதினம், வெசாக்தினம், கிறிஸ்மஸ்தினம், மகமதுபிறந்ததினம், தைப்பொங்கல்தினம் ஆகியனவே அந்தஏழுதினங்களுமாகும். இவைகள் சகலஅரசாங்கசேவையாளருக்கும் விடுமுறைநாட்களாக இருந்துவரும். இவைதவிரச் சமயசம்பந்தமான பெருநாட்களின் அட்டவணையொன்றும் தயாரிக்கப்படவிருக்கிறது. இப்பெருநாட்கள் பல்வேறுசமயங்களின் ஆலோசனைக்கம்மிற்றிகளையும் கலந்துஆலோசித்தபின்னரே தயாரிக்கப்படும்.

### எட்டுவிடுமுறைநாட்கள் போதுமாம்

அபிவிருத்தியடையாத இலங்கையில் ஆறு அல்லதுஎட்டுப் பொதுவிடுமுறைநாட்களுக்குமேல் இருக்கக் கூடாதென்றும், இது அரசாங்கத்துக்கும், தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் பொருந்துமென்றும் இலங்கை வர்த்தகசங்கம் உள்நாட்டுமந்திரிக்கு அறிவித்திருக்கிறது. பதினைந்துதினங்களை விடுமுறைநாட்கள் ஆக்குவது நியாயமானதென்று மந்திரிசபையின் உபகம்மிற்றிசெய்தசிபாரிசை வர்த்தகசங்கம் ஆதரிக்கவில்லை.

### நகாதபிரசுர விலக்குச்சட்டம்

வகுப்புஉணர்ச்சிகளையும், சமயஉணர்ச்சிகளையும் தூண்டிவிடக்கூடிய பிரசுரங்களைத் தடைசெய்யும் புதிய சட்டம்ஒன்று சென்ற1-ந்திகதியன்று சனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுநிறைவேறியது. நீதிமந்திரியின் பாராளுமன்றகாரியதரிசி இதனைக் கொணர்ந்து சபையில்பேசியபோது, வகுப்பு சமயஉணர்ச்சிகளைத் தூண்டி மக்களிடையே கொந்தளிப்பையும், துவேஷத்தையும் உண்டுபண்ணக்கூடிய எந்தவிதமானபிரசுரத்தையும், விலக்க இந்தப்புதியசட்டம் வசதியளிப்பதாகக்கூறலாயினர். ஈற்றில் ஏகமனதாக இதுநிறைவேறியது.

### சேதமடைந்த கடைகளும் வீடுகளும்

இலங்கையிலே சென்றவைகாசிமாதம்நடைபெற்றகலகத்தின்விளைவாக நாடுமுழுவதிலும் 1,361வீடுகள் சேதமடைந்தன; இவற்றிலே 782வீடுகள் முற்றாகப்பரிநாசமாக்கப்பட்டன; 907 கடைகள் சேதமடைந்தன; இவற்றிலே 433கடைகள் முற்றாகப் பரிநாசஞ் செய்யப்பட்டன; பதவியாவிலே 11 தொழிலாளர் கொல்லப்பட்டார்கள்; தமிழாசிரியர்கள்இருவர் உயிரிழந்தார்கள்; சேதமடைந்தகடைகளின் பொருட்சேதமதிப்பு சுமார்75லட்சம் ரூபா; கலகத்தினல்பாதிக்கப்பட்ட வியாபாரிகளில் 681பேர்இலங்கையர்கள்; 226பேர்இந்தியர்கள் அல்லது நாடற்றவர்கள்; இலங்கையிலிருந்து வைகாசியிலே 900பேரும், ஆனியிலே 1,305பேரும், ஆடியிலே 1,201பேருமாக 3,406இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பியிருக்கிறார்கள்என்றெல்லாம் சனப்பிரதிநிதிகள்சபையிலே விபரங்கள்வெளியிடப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட அரசாங்கபாடசாலைத் தமிழாசிரியர்கள் இருவருள் ஒருவர் வெலிமடையைச்சேர்ந்த வி. செல்லத்துரைஆசிரியர். இவர் மகாஓயாவில் கொல்லப்பட்டார். மற்றவர் ஹிரிந்துகொடை எனுமிடத்தில் கொல்லப்பட்ட எஸ். கந்தப்புஆசிரியர் கலகத்தினல் சேதம் அல்லதுநஷ்டம் அடைந்தவர்களிடமிருந்து நிவாரணமும், நஷ்டஈடும்கேட்டு அரசாங்கத்துக்கு 1,163 மனுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஆனல்; இதுவரை எவருக்குமே நஷ்டஈடுகொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தால் அதைப்பற்றி இன்னுமேஓர்முடிவும் செய்யப்படவில்லை.

### சேனநாயகா உருவச்சிலை

தற்போது சனப்பிரதிநிதிகள் சபைமுன்பாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திரு. டி. எஸ். சேனநாயகாவின் உருவச்சிலையைக் கல்லோயாப் பள்ளத்தாக்கிலே சேனநாயகாசமுத்திரம் என்ற பெரியவாவியின்முன்பாக ஸ்தாபிப்பதைத் தாம்எதிர்ப்பதாகக் கல்லோயாஅபிவிருத்திச்சபை அங்கத்தவருள் ஒருவரான திரு. விஜேபாகு விஜேசிங்காகூறியிருக்கின்றார். அதற்குஅவர் கூறும்காரணம், இந்தஉருவச்சிலை ஓர் பூதம்போன்று காட்சியளிப்பதால் சனங்கள் அதைக்கண்டு பயந்துவிடுவார்கள்என்பதே.

### மட்டக்களப்பு ஆசிரியகலாசாலை

மட்டக்களப்பிலுள்ள அரசினர் தமிழ்ஆசிரியகலாசாலை இவ்வருடஇறுதியிலே மூடப்படுமென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கலாசாலையில் பதினன்கு பேராசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். 75 மாணவர்கள்வரையிலே கல்விபயின்றுவருகின்றார்கள். இதுமூடப்படுமிடத்து மாணவர்கள்யாவரும் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ளஆசிரியகலாசாலைகளுக்கு மாற்றப்படுவார்கள். இந்தக்கலாசாலையைமூடுவதென்ற கல்விப்பகுதியின் தீர்மானம் மட்டக்களப்புப்பகுதியில் பெரிதும்கண்டிக்கப்படுகிறது.

### 9மாதம்–524கொலைகள்

இவ்வருடத்திலே சென்றபுரட்டாசியீறுகவுள்ள முதல்ஒன்பதுமாதங்களிலும் இலங்கையில் மொத்தமாக 524பேர் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனல், சமீபகால வகுப்புக்கலகங்களின்போது கொல்லப்பட்டவர்களின் தொகை இதில்அடங்காது. சென்ற 1957-ம்ஆண்டிலே மொத்தமாக 527 கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனல், இவ்வருடத்தின் முதல்ஒன்பது மாதங்களிலும் 524கொலைகள் நிகழ்ந்துவிட்டன. சென்றவருடத்தொகையை முறியடிக்க இன்னும்மூன்று கொலைகளே நிகழவேண்டியிருக்கின்றன இவ்விதம் கொலைகளின்தொகை அதிகரிப்பதற்கு மரணதண்டனை தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதும் ஓர் காரணமாக இருக்கலாமென்று கருதப்படுகிறது. 1947-ம்ஆண்டுக்குப்பின் சென்றவருடமே அதிகமானகொலைகள் நடைபெறலாயின. ஆனல், இவ்வருடம்முடிவாக இன்னும்மூன்று மாதங்கள் இருக்கும்போதே இதற்கிடையில் 524கொலைகள்நிகழ்ந்திருக்குமானல், இவ்வருடமுழுவதிலும் எத்தனைகொலைகள் நிகழுமோ தெரியவில்லை.

## மிஷன்ஞாயிறும் வேதபோதக நாடுகளும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேசுவின் அர்ச். தெரேசம்மாளே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்றும் சொல்லிவாரும். அடுத்துவரும் மிஷன்ஞாயிறைப் பயன்படுத்திப் பரிசுத்தபிதாவின் விசுவாசப்பரப்புதற்சபைவெற்றிகரமாகத் தொண்டாற்றிவருமாறு தருமத்தாலும், செபத்தாலும் தக்க உதவிபுரிய முன்வருவீராக!

## இலங்கை வானெலியில் கத்தோலிக்க நிகழ்ச்சி

12-10-58ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிதொடக்கம் 10மணிவரையும் திரு. அருளானந்தம் யேசுதாசன் அவர்களால் தயாரிக்கப்பட்ட விசேஷ நிகழ்ச்சி இலங்கைவானெலித் தேசிய ஒலிபரப்பில் நடாத்தப்படும். கத்தோலிக்கசம்பாஷணை, கட்டுரைகள், கத்தோலிக்கசெய்திகள், பாட்டுகள்முதலியன நிகழ்ச்சியில் அடங்கியிருக்கும்.

## பங்கிட்டுக்கொடுபட்ட அரசாங்கநிலங்கள்

காணிஅபிவிருத்திச் சட்டத்தின்கீழ் பங்கிட்டுக்கொடுபட்டுள்ள நிலங்களை எவரும் வருடாந்த குத்தகைக்குக் கொடுக்கப்படாதென்றும், ஈடுவைக்க, அன்றேல் விற்பனைசெய்யப்படாதென்றும் காணிக்கம்மிஷனர் உத்தரவுபிறப்பித்திருக்கின்றார். அந்தந்தப்பெரும்பிரிவிலுள்ள அரசாங்கஅதிபரின் முன் உத்தரவின்றி நிலங்களை விற்பனைசெய்கிறவர்கள்மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர்எச்சரித்திருக்கின்றார். காணிஅபிவிருத்திச் சட்டத்தின்கீழ் பங்கிட்டுக்கொடுபட்ட நிலத்தைப் பங்கீட்டுக்காரனல் கமஞ்செய்ய முடியாதிருந்தால் அந்தந்தப்பிரிவின் அரசாங்கஅதிபரின் அனுமதியை எழுத்துமூலம்பெற்றுத்தான் அந்த நிலத்தில் மற்றொருவரைக்கொண்டு கமஞ்செய்யவேண்டும். 1958-ம்ஆண்டின் பெரும்போகமுதல் முன்சொன்ன சட்டத்தின்கீழ் பங்கிடப்பட்ட நிலத்தை எவராவது குத்தகையாகக்கொடுத்தாலும், விற்பனைசெய்தாலும் அவர்மீது நடவடிக்கைஎடுக்கப்படும்.

* * *

● மலாயா, சிங்கப்பூர்ப் பிரசைகளைத்தவிர வேறெவரும் தங்கள் நாட்டுக்கு வருவதைத்தடுக்க மலாயா அரசாங்கம் ஓர்சட்டம் இயற்றியுள்ளது. இந்தச்சட்டத்தின்கீழ் பிரித்தானியபிரசைகள் எவ்விதகட்டுப்பாடுமின்றிச் சிங்கப்பூருக்குச் செல்லும்உரிமையை இழந்துவிடுவார்கள். சிங்கப்பூருக்கு விஜயஞ்செய்ய வேண்டுமானல் முன்னதாகவே மனுச்செய்துகொள்ளவேண்டும்.

● சோவியற்ருஷியா முதற்தாக்குதல் நடத்துமானல் பிரித்தானிய வெடிகுண்டுவீசும் விமானப்படைகள் முதலாவது எதிர்த்தாக்குதலில் முக்கியமான இடத்தை வகிக்குமென்று பிரித்தானிய விமானப்படையின் பிரதமஅதிகாரியான ஜெனறல் தோமஸ் என்பவர்கூறியிருக்கின்றார். பிரித்தானிய பாதுகாப்புமந்திரி விமானத்தளங்களை இருதினங்களாகச் சுற்றிப் பார்வையிட்டபின்னரே அவர்இவ்வாறு அறிவித்திருக்கின்றார்.

● அணுவைச் சமாதானபாவனைகளுக்குப் பயன்படுத்துவதில் அண்மையிலே ஐக்கிய அமெரிக்கதேசத்தில் கண்டறிந்துள்ள முன்னேற்றங்கள் பற்றிப் பதின்மூன்று புத்தகங்கள் கொண்ட தொகுதிஒன்றை ஜெனிவாநகரில் நடந்துள்ள "ஆக்கவேலைக்கு அணுச்சக்தி" [illegible] கலந்துகொண்ட ஒவ்வொருக்கும் அமெரிக்க அரசாங்கம் அளித்துள்ளது. இதிலே அணுவிஞ்ஞானத்தில் இதுவரை வெளிவாராத விபரங்கள்பல கொடுபட்டிருக்கின்றனவாம்.

## ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

இம்மாதம் 22-ந்திகதி புதன்கிழமை பின்னேரந்தொடக்கம், 26-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலைவரைக்கும் மருதமடுத்திருப்பதியில் ஒருஞானவொடுக்கம் நடைபெறும். இதிற்பங்குபற்ற விரும்பும்ஆசிரியர்கள் நமக்குக் கூடியசீக்கிரம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 8-10-58.

## கோலாலம்பூர் மேற்றிராணியார்

### பகிரங்க வரவேற்பு உபசாரம்

கோலாலம்பூர் மேற்றிராணியாராகிய மகாவந். டொமினிக் வேந்தர் கோன் ஆண்டவர் அவர்கள் வருகிற 12-ந் திகதி ஞாயிறுவாரம் சாயந்தரம் 5 மணிக்குப் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக் கோவிலிலே திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளுவார். அதனைத்தொடர்ந்து சம்பத்திரிசியார் கல்லூரிமண்டபத்திலே யாழ்ப்பாணமேற்றிராசன ஐக்கியசங்கத்தின் ஆதரவில் அவருக்கு ஓர் பகிரங்க வரவேற்பு உபசாரம் நடந்தேறும்.

## ஸ்ரீமதி நீக்கிலாப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளையவர்களின் 5-ம்வருட மரணஞாபகம்

"என்னுடையசீவியம் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது"

"என்சீவியத்தில் நேசித்தவர்களே என்னைமரணத்திலும் மறக்காதீர்கள்" எங்கள் நேசத்துக்குரிய ஸ்ரீமதி நீக்கிலாப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை மரணத்திரையுள் மறைந்த ஐந்தாம்வருடம் 10-10-58-ல் பூர்த்தியாகின்றது. இவவுடைய ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி தயவாக வேண்டுகின்றேம். இவவுடைய ஆத்துமம் சமாதானத்தில் இளைப்பாறுவதாக.

பி. நீக்கிலாப்பிள்ளையும் மக்களும்.
பாண்டியந்தாழ்வு.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். சவேரியார், அர்ச். யூதாததேயு, அர்ச். பதுவைஅந்தோனியார், மற்றும் சகலஅர்ச்சியசிட்டர்களின் மன்றாட்டுக்களினலும், நாமும், வெளியூரில்வதியும் எமதுஇனத்தவர்களும் சென்றவருட பெருவெள்ளம், அண்மையில்ஏற்பட்ட வகுப்புக்கலவரமாகிய ஆபத்துக்களில் உயிர், பொருள்சேதமின்றி அதிசயவிதமாய்க்காப்பாற்றப்பட்டமைக்கும், சென்றஆவணிமாதம் நடைபெற்ற எனது பரீட்சையில்நான்நன்றாய்எழுதியமைக்கும் எமதுஉளங்கனிந்த நன்றியறிதலைச் சமர்ப்பிக்கின்றேம். இன்னும் எங்கள்குடும்பத்தில் தேவஆசீர்வாதமும், ஒற்றுமையும் நிலைத்திருக்கவும், நாங்கள் நினைத்திருக்கும் நற்காரியங்கள் அனுகூலமாகவும் அமலனை வேண்டுகின்றேம். எமது அசட்டைத்தனத்தினல் நன்றியறிதலைச்சமர்ப்பிக்க வெகுநாள்தாமதித்ததற்காக வெகுவாய்மனம்நொந்து மன்னிப்புக்கோருகின்றேம் மிஸ். சி. இக்னேசஸ்.

மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்குக் கடன் கொடுக்கிறவர் யார்?

ஏழைகள்மட்டிலே எமக்குள்ள கடமையாது? கிறீஸ்துவர்களாகிய நாம் அவர்கள்மேல் விசேஷகடமை பூண்டுள்ளோம். கிறீஸ்துவனிடத்திலே பிறர்சிநேகம் ஓர்சிறந்தபூஷணமாய் விளங்கவேண்டும். தேவசிநேகம், பிறர்சிநேகம் இவ்விரண்டிலும் சகலநீதிப்பிரமாணமும், கற்பனைகளும் அடங்கியிருக்கின்றன. தேவசிநேகமின்றிப் பிறர்சிநேகமில்லை. பிறர்சிநேகமின்றித் தேவசிநேகம்இல்லை. ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்கமுடியாது. எவரிடம் உண்மையானதேவசிநேகம் இருக்கிறதோ அவரிடம் உண்மையானபிறர்சிநேகம் இருக்கும்.

பிறர்சிநேகம்என்று பொதுப்படக் கூறினும் ஈண்டுஅதை 'ஏழைகளின்பால் சிநேகம்' என்று குறிப்பாகப் பொருள்கொள்ளவேண்டும். கடவுளைச் சிநேகிக்கிறேன்என்று நினைக்கிறாய். உண்மையாகவே உன்னிடம்தேவசிநேகம் இருக்கிறதாஎன்று கூறவேண்டுமானால் உன்னிடம்பிறர்சிநேகம் இருக்கிறதாவென்று சோதித்துப்பார். ஒருவனிடம்பிறர்சிநேகம் இல்லாவிடின் அவனிடம் தேவசிநேகமும் இல்லைஎன்பது திண்ணம். பிறர்சிநேகமானது வெறும் வார்த்தையிலும், நினைவிலும்மட்டும் அடங்கியில்லை. ஏழைஎளியோரைச் சிநேகிக்கிறேன் என்றுசொன்னால், நினைத்தால்மட்டும் போதாது. அதைக் கிரிகையில் காட்டவேண்டும். அன்பின் சாட்சி கிரிகையின்காட்சி. நம்மிடம் அன்புஇருக்கிறதென்று கிரிகைதான் சாட்சிசொல்லும். ஆகவே, ஏமாந்து போகவேண்டாம். நம்மிடம் பிறர்சிநேகம்இருக்கிறது, ஏழைகள்மீது நமது கடமையைச் செலுத்துகிறோம்என்று நமதுகிரிகையால் காட்டவேண்டும்.

ஏழைகள்மீது அனுதாபம்காட்டுவதற்கு அநேககாரணங்கள்உண்டு. நமது மனச்சாட்சியே நம்மைஏவுகின்றது. தரித்திரத்தால் கஷ்டப்பட்டுவருந்தி யாசகஞ்செய்வோரைக் காணும்போது நமதுமனம் இரங்குவதில்லையா? நம்மை அவர்களுடையநிலைமையில் வைத்துப்பாவித்து அவர்களுக்கு நம்மால்கூடியஉதவிகளைச் செய்யவேண்டுமென்று நமதஉள்ளத்தொலி உரைப்பதில்லையா? தனவந்தன்ஒருவன் தாராளமாய் ஏழைகளுக்குஉதவும்பொழுது அவனைப்பாராட்டுவதில்லையா? அதற்கு மாறாய்க் கையிறுக்கமுள்ள உலோபிகளை இகழ்வதில்லையா? நம்மைச்சூழவிருக்கும் இயற்கையானது நமக்கு ஏராளமானஉதவி செய்வதினால் நாமும்பிறருக்கு உதவிசெய்யவேண்டுமென்று போதிக்கின்றதே

நாம்ஏழைஎளியவர்களுக்கு இரங்கவேண்டுமென்று வேதாகமத்திலும் பல இடங்களில் கூறப்பட்டிருக்கிறது. "எளியவனாகிய உன்சகோதரனுக்கு உன் இருதயத்தை நீகடினமாக்காமலும், உன்கையைமூடாமலும் அவனுக்கு உன்கையைத் தாராளமாய்த் திற... உன்ஏழைச்சகோதரனுக்குக் கொடாமல்மறுத்து, அவன்மேல் வன்கண் வைக்காதபடிக்கும், அவன்உன்னைக்குறித்து ஆண்டவரைநோக்கி அபயமிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு....சிறுமைப்பட்டவனும், எளியவனுமாகிய உன்சகோதரனுக்குக் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான்உனக்குக் கட்டளையிடுகிறேன்." (உபாகமம் 15: 7–11).

கடவுள்நமக்கு இந்தக்கண்டிப்பான கட்டளையைக் கொடுத்திருக்கிறார். அவரும் அதை நமக்குஓர்மேல்வரிச்சட்டமாகவும் செய்துகாட்டுகிறார். அவர் ஏழைகளின்தகப்பன். கிறீஸ்துநாதர் வறியவர். வறியவரின்அன்பர். "அவர் சகலசம்பத்து முள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடையதரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரானார்." (2 கொரி: 8, 9). "மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையதாய் இருக்கிறது" என்றுஆண்டவர் மலைமேல் பிரசங்கிக்கையில்சொன்னார். தம்மைப்பின்சென்றஏழைகளை வனாந்தரத்தில்போஷித்தார். "இந்தச்சனங்களுக்காகப் பரிதபிக்கிறேன். இவர்கள் இப்பொழுது நம்முடன்தங்கியிருந்த மூன்றுநாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்" என்றுசொல்லி ஏறக்குறையநாலாயிரம்பேருக்குப் போசனம்கொடுத்தார்.

ஏழைகளுக்கு அனுதாபங்காட்டுவதைபிட்டு அர்ச்சியசிஷ்டர்கள் வெகு புகழ்ச்சியாய்ப் பேசுகிறார்கள். "தானம்செய்ததினால் தோபியாசுக்கு ஒருசம்மனசு உதவிக்குவந்தார். தருமம்செய்வதினால் மாணத்தினின்று தப்புவோம். நமதுபாவங்கள் நீங்கும். நமதுகண்கள்திறக்கப்பட்டு ஞானத்தைக்கண்டடைவோம்" என்று அர்ச். அகுஸ்தீனார்சொல்லுகிறார். இன்னும், பலஉதாரணங்களை ஒன்றின்பின் ஒன்றாய் அடுக்கலாம். அப்போஸ்தலர்கள் காலத்திலே ஏழைஎளியவர்களுக்காக ஞாயிற்றுக்கிழமைகளில் பணம்சேகரிக்கப்பட்டது. ஏழைக்குஇரங்குவது கடவுளுக்குக் கடன்கொடுப்பதாகும். வட்டியும்முதலும் நமக்குக்கொடுக்கப்படும். இவ்வுலகிலேயே நமக்குத்தேவஆசீரைத்தரும். நமக்குஇன்பம்கொடுக்கும் ஊற்றாகும். நன்மாணத்திற்கும், சம்பாவனைக்கும் அச்சாரமாகும். "என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள்" என்று ஆண்டவர் நம்மைஅழைப்பார். சொற்பமுதல் போட்டுப் பெருந்திரவியம் சம்பாதிப்பவனைப்போல் அற்பசொற்பதருமத்தினால்என்றும்அழியாத மோட்சஆனந்தத்தைஅடைவோம். மேலும்,

எளியோருக்கு உதவிசெய்யவேண்டுமென்பது ஆண்டவருடைய கட்டளை. கடைசிநாளில்: "நான்பசியாயிருந்தேன். எனக்குப் புசிக்கக் கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், 'தண்ணீர்கொடுக்கவில்லை" என்றும் "அவியாத நெருப்புக்குப்போ"வென்றும் ஆண்டவர் கர்னகடூரமாய்ச்சபிப்பார். நம்முடைய தானதர்மத்தினால் ஆண்டவர் நமக்குச்செய்யும் உபகாரங்களுக்கு நன்றிசெலுத்துகிறோம். மேலும், ஆண்டவர் நமக்கு இன்னும் பலஉதவிகளைச் செய்வதற்கு இது ஓர் தூண்டுதலாயிருக்கும்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கம் அடைவார்கள். "இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாதநியாயத்தீர்ப்புக்கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" என்று அர்ச். யாகப்பர்கூறுகிறார். சகலரும் இரட்சணியம் அடையவேண்டும். ஆனால், தனவந்தர்கள் தங்கள்பொருளைக்கொண்டு இரட்சணியத்தைச் சம்பாதிக்கவேண்டும். "நீங்கள் மரணமடையும்போது நித்தியகூடாரங்களில் உங்களைஏற்றுக்கொள்ளும்படிக்கு அநீதப்பொருட்களைக்கொண்டு உங்களுக்குச்சிநேகிதரைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள்." (லூக்: 16: 9)

ஏழைகளுக்கு அவசியமானவைகளையெல்லாம் உங்களால் கொடுத்துமுடியாதுதான். ஆனால், உங்களால் கூடியதையாவது அவர்களுக்குச்செய்யுங்கள். "உங்கள்அப்பத்தைப் பசியோடிருப்போருக்குப் பங்கிட்டுக்கொடுங்கள். தரித்திரரையும், அகதிகளையும் உங்கள்வீட்டிற்குக் கூட்டிப்போங்கள். நிருவாணியைக்கண்டதும் அவனைப் போர்த்துங்கள். அப்போது உங்கள் வெளிச்சம் [illegible] கிளம்பும். கொஞ்சத்துக்குள் உங்களுக்குச் சேமம்உண்டாகும். உங்கள் நீதி உங்கள்முன் நடக்கும். ஆண்டவருடையமகிமை உங்களைப்பாதுகாக்கும். அப்போது நீங்கள்பிரார்த்திக்க, ஆண்டவர் உங்கள்செபத்தை ஏற்றுக்கொள்ளுவார்...தரித்திரனுக்கு இருதயவாஞ்சையோடு உதவிசெய்து, துன்புற்றஆத்துமாவை ஆறுதலால் நிரப்புவீர்களேயாகில் உங்கள்பிரகாசம் இருளின்நடுவே உதயமாகும். உங்கள் அந்தகாரம் பட்டப்பகலாய்விளங்கும். ஆண்டவர்என்றும் உங்களுக்கு இளைப்பாற்றியைத்தருவார். உங்கள்ஆத்துமாவைத் தமதுபிரகாசக்கதிர்களால் நிரப்புவார். (இசையாஸ். 58: 7–11)

மிஷன்ஞாயிறை மறக்கவேண்டாம். வேதபோதகநாடுகளிலிருக்கும் ஏழைகளில்இரங்குங்கள்.

— A. S.

# கத்தோலிக்கர் அல்லாதவர் மத்தியில் தொண்டாற்றும் கன்னியாஸ்திரிமார்

அதிகமாக மனதைக்கவர்வனவாய் ரோமாபுரியிலுள்ள இடங்களிலே "உல்லாசப்பிரயாணி காரியாலயம்" என்பதும்ஒன்று. இது அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய சதுக்கத்துக்குச் சமீபமாகவுள்ளது. இதிலே பல விசேஷங்கள் அடங்கியிருக்கிறது. கத்தோலிக்கர் அல்லாதவர்களுக்கென்றே இதுமுக்கியமாக நடத்தப்படுகிறது. ஆனால், அவர்களதுகுழுக்களுடன் கத்தோலிக்கரும் அங்குபோகலாம். 'பெத்தானியின் மகளி'ரென அறியப்படுகின்ற கன்னியாஸ்திரிமாரே இதனை நடத்திவருகின்றனர். இவர்கள் தங்கள்தொண்டுக்கென்று சாதாரணபெண்களைப்போன்று உடைகள் தரிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் முறைமைப்படி கன்னிகா வாக்குத்தத்தங்கள் கொடுத்துச் சகலத்திலும் கன்னியாஸ்திரிமாராகவே இருந்துவருகிறார்கள்.

பெத்தானியமகளிர்என அறியப்படுகின்ற இவர்களின்சபை ஓர்உலாந்த கன்னிகாசபையாகும். அந்நாட்டிலும் இவர்களது அப்போஸ்தலதொண்டு அதிகமாகக்கத்தோலிக்கர்அல்லாதவர்கள்மத்தியில்தான். இந்தத்தொண்டினை அவர்கள் ரோமாபுரியிலுள்ள "உல்லாசப்பிரயாணி காரியாலய"த்திற்கும் விஸ்தரித்திருக்கின்றார்கள். "போயர் யூனிற்ருஸ்"என்று அழைக்கப்படுகின்ற அவர்களின்காரியாலயம 1950-ம்ஆண்டின் புனிதவருடத்திலே ஆரம்பிக்கப்படலாயிற்று. அப்போது ரோமாபுரிக்கு வந்துகொண்டிருந்த கத்தோலிக்கர்அல்லாதவர்களின் பெருந்தொகையையும், அவர்களுக்கு யாதொன்றும் அன்றேல் யாதும் அற்பமாகத்தானும் செய்யப்படவில்லையென்பதையும் கண்டார் மொந்தினி அதிமேற்றிராணியார். அப்போதுதானே "போயர் யூனிற்ருஸ்" ஆரம்பிக்கப்பட்டது. புனிதவருடம் முடிந்தபின்னரும் முன்வந்தவர்களுக்குத்துணையாய் ஒல்லாந்திலிருந்து வேறுகன்னியாஸ்திரிமாரும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

தங்கள்தொண்டு பிரஸ்தாபமாக அறியப்படுமாறு பிரான்ஸிய, டேனிஷிய, ஆங்கிலேய, ஜேர்மனியபாஷைகளிலே கவர்ச்சிகரமான துண்டுப்பிரசுரங்களை அவர்கள் சித்தஞ்செய்து பல வேறுபிரயாண ஏஜென்ஸிகளுக்கும் அனுப்பிவைக்கிறார்கள். சிறுகுழுவினரோடுதான் — ஒருவர்அல்லது இருவரோடுதானும் அவர்கள்கடமையாற்ற அதிகமாகவிரும்புகின்றார்கள். இந்தத் தரிசகர்கள்குழுவினரை அழைத்துச்சென்று ரோமாபுரியைச் சுற்றிவர அவர்களுக்குக்காண்பித்து, அவர்கள் காண்கிறவைகளை அவர்களுக்கு விளக்கிக்கூறுகின்றார்கள். இந்தக்கத்தோலிக்கல்லாத தரிசகர்கள் அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே பாப்பரசரது பேட்டிபெறுவதற்கும், அந்தப்பிரமாண்டமான மகாதேவாலயத்தின்கீழே பூமியைஅகழ்ந்துநடத்தப்படும் புதைபொருள் ஆராய்ச்சிகளைப்பார்ப்பதற்கும், வத்திக்கான் தோட்டங்களைத் தரிசிப்பதற்குமாக அவர்களுக்கு அனுமதிச்சீட்டுகள் வழங்கக்கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

இந்தக்கன்னியாஸ்திரிமார் தங்கள் தொண்டைச் சரிவரச்செய்வதற்கு அநேகபாஷைகளை அறிந்திருக்கவேண்டியவர்கள். ஒல்லாந்திலுள்ள தங்களது தாய்மடத்தில்தானே உலாந்தபாஷையைவிட ஜேர்மனிய, ஆங்கிலேய, பிரான்ஸியபாஷைகளைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். ரோமாபுரிசென்றதும் இத்தாலியபாஷையைக்கற்கத் தொடங்குகிறார்கள். அவர்களில்இருவர் சுவீடினியபாஷையையும் கற்கத் தொடங்கினர். ஏனெனில், ஸ்கான்டினேவிய தரிசகர்களின்குழுக்களும் அநேகமாக அங்கு வந்துகொண்டிருப்பதேயாகும். அவர்கள் பல்வேறுஇனமானமக்களை — அதாவதுபல்வேறு சபைகளைச்சேர்ந்த புரொட்டஸ்தாந்த பாதிரிமார், புத்தகுருமார், ஆபிரிக்க சிற்றரசர்கள், புரொட்டஸ்தாந்த குருத்தவமாணவர்கள்,புரொட்டஸ்தாந்தகநிஸ்துவர்களை வரவேற்றுபசரிக்கின்றார்கள். ஓர்முறை சுவீடனிலிருந்துவந்த ஓர் குழுவினருடன் போயிருந்த லூத்தேர் சபைப் பாதிரியார்ஒருவர் "கற்றக்கோம்ஸ்" எனப்படும் சுரங்கஅறைகளிலே திவ்வியபூசைகாண விரும்பினார். கன்னியாஸ்திரிமார் அதற்குவேண்டியஒழுங்குசெய்ததுடன் முதல்நாள் இரவு அவருக்குத் திவ்வியபூசைத் திருச்சடங்குகளையும், அதன்கருத்தையும் விளக்கிக்கூறினர். இந்தலூத்தேர் சபைத் தரிசகர்களுக்கு இது அவசியமானஓர்காரியமல்ல. ஆயினும்அவர்களில் பெரும்பான்மையினர் பூசைகாணச்சென்று பெரிதும்மனவருட்சிகொள்ளலாயினர். பூசைமுடிந்தபின் ரோமாபுரியில் இன்னும்காணவேண்டியனவாய் எஞ்சியிருந்த தரிசனையையும அவர்கள்தரிசிக்கச் செய்தார்கள். ரோமாபுரியைத்தரிசிக்கும் கத்தோலிக்கர்அல்லாதவர்கள் டலமுறைகளிலும் நர்அபிப்பிராயத்துடன்செல்லும் வழக்கமுடையவர்களாய் இருந்தார்கள். ஆனால், இந்தக்கன்னியாஸ்திரிமாரின் சேவையானது திருச்சபையின் உண்மைநிலையை அவர்கள்கண்டுதெளியச் செய்கின்றது.

---

● ஞாபகசக்திக்குப் பேர்போனது, யானைதான்; அதுநீண்டநாள் கறுவைத்துக் கொள்ளுமென்று பலரும் எண்ணுகிறார்கள். ஆனால், குதிரை, பசு, நாய்முதலியவைகளுக்குள்ள ஞாபகசக்திதானும் யானைக்குஇருப்பதில்லை; குரங்குக்குள்ள ஞாபகசக்தி மற்றெந்தப்பிராணிக்குமே கிடையாதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள்.

● றொக்கெற்றுகள் மனிதனைஏற்றிக்கொண்டு சந்திரமண்டலத்துக்குச் செல்லுங்காலம் அதிகம்தூரத்தில் இல்லையென்றும், விரைவிலே இத்தகைய றொக்கெற்றுகள் வானவெளியில் சுற்றிச்செல்லுமென்றும் ரூஷியவிஞ்ஞானிகள் தங்கள்கட்டுரைகளிலே நம்பிக்கைதெரிவித்திருக்கிறார்கள். அதிகம்விரைவிலே சந்திரன், செவ்வாய் ஆதியகிரகங்களுக்குச் சென்றுவிட்டுப் பூமிக்குத் திரும்பிவரக்கூடிய றொக்கெற்றுகள் அமைக்கப்பட்டுவிடுமென்று வாஸிலி பெஸன்கோவ் என்ற ரூஷிய விஞ்ஞானி கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

இளைஞராகிய நீங்கள் உங்களைப்போன்ற இளைஞர் வேறுஇடங்களில் என்னசெய்கிறார்கள்என அறியவிரும்புவீர்கள்.

இங்கிலாந்தில் கார்டிவ் பட்டணத்தில் அர்ச். இல்ரிட் கலாசாலையுண்டு. அங்குள்ள சிரேஷ்டவகுப்பு மாணவரிற்சிலர் ''கிறிஸ்துவ முன்னேற்ற இயக்கம்'' ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். பக்கத்திலிருக்கும் மகளிர் உயர்தரப்பள்ளி மாணவிகளும் அதிற்சேர்ந்து உழைக்கின்றனர். எல்லாருமாக இருபது அங்கத்தவருண்டு.

கிறிஸ்துவதலைவர்களை ஆக்குவதே இவர்களின் நோக்கம். அக்கல்லூரியில் படிப்புமுடிந்து பல்கலைக்கழகங்களுக்குச் சென்றாலும் தமது சேவையைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பர். இவர்கள் சென்றபின், தொடங்கிய சேவையை அக்கல்லூரிகளிலே தொடர்ந்து நடாத்த வேறுமாணவரையும் பயிற்றியிருக்கின்றனர்.

அவர்கள் செய்துவரும் சேவைகள்யாவை? நகரஅதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, குடும்பக்கட்டுப்பாட்டு நிலையங்களை ஏற்படுத்துவதைக் கண்டித்திருக்கின்றனர். பொதுவுடைமை, விவாகரத்து, ஒழுக்கக்கேடான படங்கள், குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசாரம் போன்றவைகளைப்பற்றி உரியஅதிகாரிகளுக்கு அறிவித்திருக்கின்றார்கள். சமய. ஒழுக்க சம்பந்தமான விடயங்களைப்பற்றிக் கத்தோலிக்கரல்லாத பிறபாடசாலைகளுடன் தர்க்கமாடியிருக்கின்றனர்.

இளம் கத்தோலிக்க தொழிலாளர் (Y. C. W.) இயக்கமுறையில் பயிற்சிபெறுபவராகையால் அவர்களுடைய ஆன்மசிவியவளர்ச்சியும் வலியுறுத்தப் பெறுகிறது.

சென்ற மாசியில் தொடங்கிய இவ்வியக்கம் ஆனியில் நானூறு பேர் சமுகங்கொடுத்த மகாநாடுஒன்றை நடாத்தியது. கத்தோலிக்கசேவை மனப்போக்கு உங்களுக்கும்உண்டா?

அண்ணா

—*—

## யேசு எம்முடன் என்றும் இருக்கிறார்

யேசுநாதர் அப்போஸ்தலருடன் ஒருபடகில்சென்றுகொண்டிருந்தார். அப்போது யேசுநாதருக்கு நித்திரை வந்ததினால் அவர் நித்திரைசெய்துகொண்டிருந்தார். இதோ! இருந்தாற்போல் புயற்காற்றுச் சண்டமாருதம்போற் பலமாக வீசியது. கடல் கொந்தளித்து எழுந்தது. அப்போஸ்தலர்கள் அஞ்சி நடுங்கினார்கள். சாவுக்குஅஞ்சிப் பரதவித்தார்கள். இதோ! படகு கவிழ்ந்துவிடும் தறுவாயில் இருந்தது. யேசுநாதர் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். குருவே! சாகப்போகின்றோம் என அப்போஸ்தலர்கள் அலறினார்கள். யேசுநாதர் நித்திரை தெளிந்து கடலுக்கும், காற்றுக்கும் கட்டளையிட்டார். அப்போது எங்கும் அமைதி நிலவியது. அப்போஸ்தலர்கள் அதிசயித்தார்கள்.

யேசுநாதர் அவ்வேளையில் அப்போஸ்தலருடன் இருந்தார். யேசு எம்முடன் என்றும்இருக்கிறார். யேசு அப்போஸ்தலர்களுடன் இருக்கும்போது அவர்கள் தாங்கள்சாகப்போகின்றோமென்று அலறினார்கள். யேசு எம்மைக் காப்பாற்றுவார். யேசு எம்மத்தியில் இருக்கும்போது நாம்எதற்குப் பயப்படவேண்டுமென்ற மனத்தைரியம் அப்போஸ்தலர்களிடம் இருக்கவில்லை. எமது நிலையில்லாத உலகசீவியத்தை இழக்கப்போகிறோமேஎன்று அப்போஸ்தலர்கள் அஞ்சியது எத்தகைய மதியீனம். எம்மைஇரட்சிக்க மனுஷாவதாரம்எடுத்த இரண்டாம் ஆளாகிய சுதனாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்கள்மத்தியில் படகில்இருக்கும்போது உலகமேமுடிவுறும் பயங்கரங்கள் நடைபெற்றாலும் அவர்கள் எதற்குப் பயப்படவேண்டும்? விசுவாசம், நம்பிக்கையுள்ள வர்களாக ளாக நாம் இருக்கவேண்டும் என்பதற்கு இவைகள்எமக்கு எடுத்துக்காட்டாகும்.

தேவனில் நம்பிக்கை உள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும். "யேசுவே! தாவீதின் குமாரனே! எங்கள் பேரில் இரக்கமாயிரும்" என்று சுவிசேஷத்தில் சொல்லப்பட் டிருக்கிறதே. எமக்குக் கொடுக்கப்பட்ட உலக சீவியம், நித்திய சீவியத்தை நாம் அடைவதற்கு என்பதை மனதில் இருத்திக்கொண்டு எம்உலகசீவியத்தை நித்தியசீவியமாகிய மோட்சத்தை அடையும்பாதையில் நடாத்திக்கொண்டு வரவேண்டும்.

அவ்வேளையில் எமக்கு அப்போஸ்தலர்களுக்கு ஏற்பட்டதுபோல் ஏற்படக்கூடும். அதாவது எமது சீவிய காலத்தில் கடற்கொந்தளிப்புகளும், புயற்காற்றும் எமது நித்தியசீவியப் படகை அமிழ்த்திவிடுவதுபோல் தோன்றும். அப்போது எமக்கு ஒன்றுக்கும் பயமில்லை. ஏனெனில், யேசு எம்மத்தியில் எம்மோடு என்றும் இருக்கிறார். அவரில் நாம் விசுவாசம் உள்ளவர்களாகவும், நம்பிக்கை உள்ளவர்களாகவும், தேவசிநேகம் உள்ளவர்களாகவும் இருந்தால் நாம்எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. நாம்தினமும் "யேசுவே! தாவீதின் குமாரனே! எங்கள்பேரில் இரக்கமாயிரும்"என்று பிரார்த்தித்து வருவோம்.

ஆனால், பெரியபரிதாபமான சம்பவங்கள் எம் சத்தியவேதத்தை அனுசரிப்பவர்களிலும் இருக்கின்றன. அதாவது, அப்போஸ்தலர்கள் படகில் யேசுவோடு பிரயாணஞ்செய்யும்போது ஏற்பட்ட புயற்காற்று, கடற்கொந்தளிப்பில் அஞ்சி நடுங்கியதுபோன்று இக்கத்தோலிக்க கிறீஸ்துவர்கள் தமக்குஏற்படும் கஷ்டம், துன்பம், வருத்தம், சாவு, வறுமைவேளைகளில் யேசுவைமறந்து போகிறார்கள். விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் அற்றவர்களாகி விடுகிறார்கள். அநித்தியவாழ்வைப் பெரிதெனமதித்துத் தேவனுக்குஏற்காத கருமங்களாகிய பேய்க்குப் படைத்தல்போன்ற பேய்க்கிருத்தியங்களில் ஈடுபட்டுத் தேவனைவெறுக்கிறார்கள்.

"உலகம் முடியுமளவும் நான் உங்களோடு இருப்பேன்"என்று யேசு திருவுளம்பற்றியதை நாம்மறந்து போகிறோம். எமக்கு வரும் சகல நோய், துன்பம், வறுமையெல்லாம் எமது நன்மைக்கே கடவுள் எமக்கு விடுகிறார் என்பதைச் சத்திய திருச்சபையின் சிலமக்கள் உணராதுவிடுகிறார்கள். ஆகவே, யேசுவின் பிள்ளைகளாகியநாம் சத்தியவேதத்தில் உத்தமராய்ச்சீவித்து யேசுவோடு மறுமையில் நித்தியமாய்ச் சீவிக்கும் பாக்கியத்தைத் தந்தருளும்படி மன்றாடுவோமாக.

—*—

## வீரனைப் பயின்ற வனிதை

(முன்தொடர்ச்சி)

பிறடெறிக் ஓசானம் வழகறிஞராகவேண்டும் என்பது அவருடைய தாயின் விருப்பமேயன்றி, அவருடையதல்ல. எனவே, சோர்பொன் பல்கலைக் கழகத்தில் இலக்கிய விரிவுரையாளராவதற்குப் போட்டியிட்டு வெற்றியீட்டி, இருபத்தெட்டு வயதில் அந்நிய இலக்கியப் பேராசிரியராக நியமனம் பெற்றதும் ஆனந்தத்துடன் பரீஸுக்கு வந்து சேர்ந்தார். அறுநூறு வின்சென்ற் த பவுல்சபைச் சகோதரர் அவரை அன்புடன் வரவேற்றனர்.

"அவர்களில் அநேகர் வறிய மாணவர் ... பிரான்சிய பிரபுஒருவர், அரசசபை அங்கத்தவர், சேனாதிபதிகள், எழுத்தாளர் பலருடனும் உறவு கொண்டேன்" என அவ் வரவேற்பைப்பற்றிக் கூறுகிறார் பிறடெறிக்; அன்று நூற்று ஐம்பதின்மர் அவருடன் திருப்பந்தியமர்ந்தனர்.

பிறடெறிக் தமது மனதிற் கிசைந்த ஓர் பெண்மணியை விவாகஞ் செய்திருந்தார். பரீஸுக்கு வரும் பொழுது மனைவியையும், குழந்தையையும் அழைத்துவந்தார். வந்தவர் வேதவிளக்கப் போரையும் தொடர்ந்து நடாத்தினர். மாணவர்பலரையும், ஆசிரியர்சிலரையும் மனந்திருப்பினர். விரிவுரையாளர் பதவியோ, குடும்ப விவகாரமோ அவருடைய பரோபகாரப் பணியைத் தடுக்கவில்லை. அறிவிற் சிறந்த மாணவர் அநேகர் கிறீஸ்துவில் சகோதரரான ஏழைகளுக்கு அவருடன் சேவை புரிய இசைந்தனர். தமது எழுத்துகளினாலும் அவர்களுக்கு உதவினர். அக்காலத்துச் சமுதாயவாதிகள் கனவிலுங் கருதாத வாழ்க்கைப்படி, ஒய்வுச் சம்பளம், வேலையின்மை, விபத்துப்போன்ற சந்தர்ப்பங்களுக்கு நட்டோத்தரவாதம்போன்று பாட்டாளிகளின் நல உரிமைகளுக்காக வாதாடினர்.

இருவருடகாலமாக அதிகதுன்பம் அனுபவித்தபின் நாற்பதாவது பராயத்தில் 1853-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 8-ந் தேதி பரமபதமடைந்தார். பிறடெறிக் ஓசானம் இறந்தபோதிலும் "அன்பின் சாத்வீகப் போர்" என அழைக்கப்பட்ட அவரது பரோபகாரப்பணி இன்றும் வளர்ந்தோங்குகின்றது. அவர் மரணிக்கும்போது தருமசபை பரிசுத்த ஸ்தானத்தின் அங்கீகாரம் பெற்றிருந்தது. இங்கிலாந்து, ஸ்கொத்திலாந்து, அயர்லாந்து, ஐரோப்பிய நாடுகள், துருக்கி, பலஸ்தீனம், எகிப்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் ஒன்பதினாயிரஞ்சகோதரர் தருமப்பணிசெய்துகொண்டிருந்தனர் அப்போது.

தற்பொழுது உலகின் பலபாகங்களிலும் கால் இலட்சத்திற்கு அதிகமானோர் ஏழைக்குடும்பங்களுக்கும், வயோதிபருக்கும், குருடர், செவிடர், ஊமைகளுக்கும், குடியேற்றக்காரருக்கும், கைதிகள், இளம்குற்றவாளிகள், படைவீரர்கள், மாலுமிகளுக்கும், பிறருக்கும் ஆன்ம, சரீர சேவைகள் புரிந்துவருகின்றனர். அதில் தமது ஞானவாழ்க்கையையும், பிறர் ஆத்தும இரட்சணியத்தையுமே இலட்சியமாக இவர்கள் கொண்டிருக்கின்றனர்.

பதினறுவயதுப்பையன் தனது இலட்சியத்தை இறுதிவரை கடைப்பிடித்ததினால் அபாரமான இந்த வெற்றியைச் சம்பாதித்திருக்கிறார். அவர் தம் வாழ்நாளிலே அர்ச். வின்சென்ற் த பவுல் சபையை அடியிட்டாரெனச்சொல்லிக்கொள்ளவில்லை. எனினும், இக்கலாவல்லுனர் திருச்சபையின் மட்டிலும், ஏழைகள்மட்டிலும் கொண்ட மாறாத அன்பினால் கிறீஸ்துவை ஒத்த மனப்பான்மை தமதுசமுதாயத்தில் வளரச்செய்

### வேதவிருத்திக்குச் சிறுவரின் கொடை 10,00,000 பவுன்

சுதந்திர நாடுகளிலிருக்கும் கத்தோலிக்க சிறுவர் – சிறுமியர் 10,00,000 பவுனுக்கு அதிகமான தொகைப்பணத்தை மிஷன் நாடுகளுக்குக் கொடுத்திருக்கின்றனர். ஆங்கிலநாட்டுப் பள்ளிக்கூடங்கள் 21,935 பவுண் அளித்தன.

சேர்ந்ததொகையில் அரைப் பங்கிற்கு மேற்பட்டதொகை அமெரிக்க மாணவரின் அன்பளிப்பாகும். மோனத்திருச்சபை நாடுகளிலிருந்து எத்தொகையும் கிடைக்கவில்லை.

வேதவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு மேற்றிராசனத்திற்கும் பணம்அனுப்பப்பெற்றது. மத்திய ஆபிரிக்கபகுதிகளில் இஸ்லாமிய மதம் ஆதிக்கஞ்செலுத்தப் பிரயத்தனஞ்செய்கிறபடியால் அதை நீக்கும் பொருட்டுக் கத்தோலிக்கபாடசாலைகள் ஏராளமாக நிறுவப்பெறுகின்றன.

சிறுவர்–சிறுமிகளே! திருச்சபை செய்யும் போராட்டத்தில் உங்கள் பங்கு என்ன? செபம், பரித்தியாகம், தருமம் ஆதியவற்றால் உதவிசெய்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். அந்த மனப்பான்மையை யாரிடமிருந்து பெற்ருர்? அவரே கூறட்டும். உலகில் கடவுள் தமக்கு அளித்த அருங்கொடை, தமது தாயாரின் இருதயமே என்ருர். "அவளின் மடியில் உமது பயத்தையும், அவளின் முகத்தில் உமது அன்பையும் பருகினேன்."

முற்றும்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல M. B. 2172**

***யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்***

ஆனைக்கோட்டை
1. விஞசித்தம்பி ராசலிங்கம்
2. பெண் மாகிறேற்

— வழக்காளிகள்.

எதிராக
ஆனைக்கோட்டை
தற்பொழுது திரிகோணமலையிலிருக்கும்
1. யோண் பொன்னையா திரையப்பா
2. பெண் சிசீலியா

— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 2172-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக்காணிகளை 1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 14-ந்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 861-உம், இன்னும் ரூபா 600-க்கு 6-5-58 தொடக்கம், 3-7-58 வரையும் 100-க்கு 8%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 184ரூபா 52சதமும்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோயிற்பற்று, ஆனைக்கோட்டை இறை, "வெள்ளையன் அடைப்பும், நாலுவரக்காடும், அழகன்அடைப்பும்" பர. நில. இலா. இரண்டும், (ப. நி. இ. 2) பயிர்வகைகளும், வீடும், வடமேற்கே சிவகுருநாதர் தியாகராசாவின் காணிக்குள்இருக்கும் கிணற்றில்பங்கும், புதிதாகத் திறக்கப்பட்ட $4\frac{1}{2}$அடிஅகல முள்ள கைஒழுங்கையால் போகும்உரித்தும். எல்லை: கிழக்கு — நன்னித்தம்பி தம்பையாவுடைய ஆதனம். வடக்கு — கீழேசொல்லப்பட்ட ஆதனம். மேற்கும், தெற்கும் ஒழுங்கையும், S. வைத்திலிங்கத்திடைய ஆதனமும்.

2. ஷெ இறை "வெள்ளையன் அடைப்பும், நாலுவரக்காடும், அழகன்அடைப்பும்" பர. நில. இலா. இரண்டும், (ப. நி. இ. 2) பயிர்வகைகளும், வடமேற்கே சிவகுருநாதர் தியாகராசாவின் காணிக்குள் இருக்கும் கிணற்றில்பங்கும், புதிதாகத் திறக்கப்பட்ட $4\frac{1}{2}$அடிஅகலமுள்ள கைஒழுங்கையால் போகும்உரித்தும். எல்லை: கிழக்கு— K. தம்பையாவுடைய ஆதனம். வடக்கு — சிவகுருநாதர் தியாகராசாவுடைய ஆதனம். மேற்கு — கைஒழுங்கை. தெற்கு — மேலேசொல்லப்பட்ட முதல்காணி.

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
21, இரண்டாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
7—10—58

● பிரித்தானிய வானெலிக்கம்பெனியிலே மூன்றுவதுநிகழ்ச்சியைப் பிரசித்தஞ்செய்கிறவரான திரு. கிறிஸ்ரோபர் பெம்பேட்ரன்அவர்கள் அக்கம்பெனியிலே தமதுபதவியைச்சென்ற மாதஇறுதியில் இராசிநாமாச்செய்து, வெஸ்ற்மினிஸ்றர் அதிமேற்றிராசனத்துக்குரிய ஓர்குருத்துவமாணவராக அனுமதிக்கப்பட்டிருக்கின்ருர். வருகிறஐப்பசிமாதத்திலே இவர் ரோமாபுரியிலுள்ள பிடாகுருமடத்தில் சேர்ந்து படிக்க விருக்கின்ருர். புறொட்டஸ்தாந்த சமயத்திலிருந்து மனந்திரும்பியஇவர் முன்னே ஓர்நியாயவாதியாய் இருந்தார்.

10-ம் வருட
## மரண ஞாபகம்

கொழும்பு, றெயில்வே கந்தோரில்
வேலைபார்த்துவரும்
திரு. இம்மனுவேல் வின்சென்ற்
அந்தோனிப்பிள்ளை அவர்களின்

**தாயார்**
**வின்னிவிறெற் அந்தோனிப்பிள்ளை**
**அவர்கள்**

1948-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 7-ந்திகதி மரணமாயினர். இந்தப் பத்தாவதுவருட ஞாபகதினத்தின்போது இதைக்கண்ணும் இனசனர், சிநேகிதர் இவவின்ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

துயருறும்
புதல்வரும், மனைவியாரும்.
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1963**

***யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்***

காலஞ்சென்ற
1. பி. இராமலிங்கத்தின் ஆதனத்தின் பேரில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 306-ம்இலக்க தத்துவவழக்கில், தத்துவகாரன் மட்டுவில் தெற்கு இராமலிங்கம் தவரெட்டினமும்,
வண்ணார்பண்ணை வடமேற்கு
2. இராமலிங்கம் கைம்பெண்
இராசம்மாவும் — வழக்காளிகள்
எதிராக
முல்லைத்தீவு
1. இராஜசிங்கம் மகள் எஸ். செல்லையா
பெண் லோகாம்பாளும்,
தற்காலம் முல்லைத்தீவு
2. எஸ். செல்லையாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1963-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 15-ந்திகதி (15-11-58) சனிக்கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,560-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்கு 2-12-57 தொடக்கம், 10-7-58 வரையும் 100-க்குப் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 214ரூபா 72சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோயிற்பற்று, மானிப்பாய்இறை கொத்தம்பனையும், கொட்டையடியும். உறுதிப்படி, பர. நில. இலா. $7\frac{3}{4}$-உம், லட்சுமிகோட்டம் என்றழைக்கப்படும் கல்வீடும், மறுகட்டடங்களும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — ஒழுங்கைமுகப்பும், விஞசித்தம்பி அரியகுட்டிக்கும், பெண் அழகம்மாவிற்கும், இப்போ நமசிவாயம் துரைரெட்டினத்திற்கும், குடும்பத்திற்கும் உரியஆதனம். வடக்கு — குறித்த அரியகுட்டிக்கும், பெண் அழகம்மாவிற்கும், இப்போ துரைரெட்டினத்திற்கும், அவர் பெண்சாதிக்கும் உரியஆதனம். மேற்கு — சுவாமிநாதர் கனகரெட்டினத்தின் உரிமைக்காரருக்கும், இப்போ டக்றர் எஸ். பொன்னுசாமிபிள்ளைக்கும் உரியஆதனம். தெற்கு— அரியபுத்திர சுவாமிநாதபிள்ளைக்கும், பங்காளருக்கும், இப்போ நன்னித்தம்பி செல்லப்பாவின் உரிமைக்காரருக்கும் உரியஆதனம். இதுஅடங்கலில் சொரியலாய் அரைவாசி.

**தா. செல்லையா,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.




# கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1220**

***யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்***

அச்சுவேலி
தற்காலம் மட்டக்களப்பு
1. அல்பேட் லயனல் பெனடிற்றும்,
2. பெண் மேரிபிலோமினுவும்

— வழக்காளிகள்.

எதிராக
பத்தைமேனி
(1) காளியப்பா முருகேசு. (2) காளியப்பா சரவணமுத்து. (3) காளியப்பா தம்பிப்பிள்ளை. (4) காளியப்பா செல்லையாவும், (5) பெண் நேசரத்தினமும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1220-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல்விபரிக்கப்படும் 4 துண்டுக்காணிகள் 1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 18-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 6,126/66-உம், இன்னும் ரூபா 3,800-க்கு 7-9-56 தொடக்கம், 7-3-57 வரையும் 10%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 5%வட்டியும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்குப்பகுதி அச்சுவேலி கோயிற்பற்று, பத்தைமேனிஇறை "மூளியன்சீமா" பர. நில. இலா. 5-உம், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும். எல்லை: கிழக்கு— பொன்னம்பலம் சரவணமுத்துவிற்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கும், மேற்கும் — சிதம்பரப்பிள்ளை பெண் செல்லம்மாவிற்கும், மறுபேருக்கும் உரிய ஆதனங்கள். தெற்கு— ஒழுங்கை. இதடங்கலில் வீடுகள் நிந்தமாகவும், மிகுதியடங்கலில் சொரியலாய் $\frac{8}{15}$-ப்பங்கு.

2. ஷெ இறை "ஆலங்கட்டையடி" நில. பர. $12\frac{3}{4}$-உம், செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும், கிணறும். எல்லை: கிழக்கு — பத்மநாதன் பெண் கமலாம்பிகையின் ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — பின்னுல்காணப்படும் 3-ம், 4-ம்ஆதனங்களும் துரையப்பா பெண் இரத்தினத்தின் ஆதனங்கள். தெற்கு — துரையப்பா பெண் இரத்தினத்தின் ஆதனங்கள். இதடங்கலில் வீடுகள் புறநீங்கலாகவும், மீதியடங்கலில் சொரியலாய்ப் $\frac{1}{10}$பங்கும்.

3. ஷெ இறை "வண்ணன்சீமா" பர. நில. இலா. 4-உம், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — மேலே சொல்லிய 2-ம்காணி. வடக்கு — பின்னுல்சொல்லப்படும் 4-ம்காணி. மேற்கு— தம்பையா கைம்பெண் தங்கமுத்துவிற்கும், பங்காளருக்கும் உரியஆதனம். தெற்கு — துரையப்பா பெண் இரத்தினத்திற்கும், பங்காளருக்கும் உரியஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

4. ஷெ இறை "வண்ணன்சீமா" நில. பர. $7\frac{3}{4}$-உம், செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும், கிணறும். எல்லை: கிழக்கு— மேலேசொல்லப்பட்ட 2-ம்காணி. வடக்கு — ஒழுங்கை. மேற்கு — காசிப்பிள்ளை இரத்தினசாமிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனங்கள். தெற்கு — 3-ம்காணி. இதில் $\frac{3}{5}$பங்கும்.

**பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1958-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 19-ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.**

5. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோயிற்பற்று, முலவைஇறை பிராயடி பர. நில. இலா. 19. மேற்படி பிராயடி பர. நில. இலா. 6. இருவகைக்கும் கூடிய நில. பர. 25. இதில் மேற்குப்புறமாக பர. நில. இலா. 14 குளி 12-உம், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — முருகர் வேலுப்பிள்ளையின் ஆதனமும், துர்வையும். வடக்கு — மோரிஸ் வரப்பிரசாதத்தின் ஆதனம். மேற்கு — வேலுப்பிள்ளை கைம்பெண் மதலைப்பிள்ளைக்கும், முருகர் கைம்பெண் பொன்னுவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். தெற்கு — பழக்தெரு. இதடங்கலிலும் மறுகாணிகளுக்குரிய கிணற்றுப்பங்கும், பயிர்ப்பங்கும், வழிவாய்க்காலும் புறநீங்கலாக. மீதமடங்கலில் சொரியலாய் $\frac{1}{3}$பங்கும், அதற்குச் சேர்ந்தவைகள் யாவும். இன்னும் மறுகாணிகளில் இக்காணிக்குரிய கிணற்றுப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும், பயிர்ப்பங்கும்.

6. ஷெ கோயிற்பற்று, மயிலிட்டி இறை "தீப்பன் சனுத்தை" நில. பர. $11\frac{3}{4}$-உம், செய்பயிர், வான்பயிர்களும், வீடுகளும். எல்லை: கிழக்கும், வடக்கும்— முலவைக் கிராம எல்லை. மேற்கு — வாய்க்காலும், கிணறும். தெற்கு — ரோட்டு. இதடங்கலில் கல்வீட்டில் நடுஅறை நிந்தமாகவும், மற்றைய அறைகளும், விருந்தைகளும் புறநீங்கலாகவும். மீதமடங்கலில் சொரியலாய் $\frac{1}{8}$பங்கு.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 7-10-58

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவிடம் நான் கேட்ட மன்ருட்டுக் கிடைத்தபடியால நேர்த்திப்படி இதைப்பிரசித்தப் படுத்துகிறேன். இன்னும் எனக்குஇருக்கும் கொடியவியாதியானது முற்றிலும்மாறிப் பூரணசுகம் கிடைக்கும்படியாக முழுநம்பிக்கையுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

சி. பத்திநாதன் பறுனந்து.
வங்காலை.

### தேவை

ஆயுள்வேத இலவசவைத்தியசாலையில் கடமையாற்றுவதற்குத் தமிழ்வைத்தியர்களும், தாதிமார்களும் தேவை. மனுக்கள் 20-10-58வரையும் ஏற்கப்படும்.

விபரங்கட்கு எழுதவும்
அதிபர்,
ஆயுள்வேத இலவசவைத்தியசாலை,
& Co. Ltd.
கோண்டாவில்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, October 9-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org